THAYAGAM

75¢

26 . 5 . 95

# தாயகம்

உண்மை:6
தேடல்:47

## பெண்கள், குழந்தைகள் உட்பட 42 சிங்களவர்கள் புலிகளால் கொலை

★ படுகொலைகளுக்காக ஐரோப்பிய சமூகம், சர்வதேச மன்னிப்புச் சபை புலிகள் மீது கண்டனம்
★ புலிகளுடன் போரிட இலங்கைக்கு அமெரிக்கா உதவலாம் ★ புலிகள் யுத்தத்தை தொடங்கியதற்கு பிரிட்டன் கண்டனம்

**சமாதான முயற்சியில் உதவ கனடா விருப்பம்**

✪ இலங்கை அரசு மனித உரிமைகளை மீறுகிறது என புலிகள் குற்றச்சாட்டு

✪ வடக்கு கிழக்கு இணைப்புக்கு பௌத்த அமைப்புகள் எதிர்ப்பு

✪ புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே அடுத்த தடவை பேச்சுவார்த்தை என்கிறது அரசு

✪ பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியா கோரும்


இலங்கைக்கான துரித பணமாற்றுச் சேவை
(குறைந்த கட்டணம், அதிக மாற்று விகிதம்)

CD விற்பனையாளர்

SENDURAN & CO
584A, PARLIAMENT ST, TORONTO TEL:(416) 962 7397


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RUS-C
ருசி

வறுத்த அரிசி மா
இடியப்பம், புட்டு,
ஏனைய
உணவுத் தேவைக்கு
உகந்தது.

| | |
|---|---|
| நிரு பிராண்ட்® Niru Brand | தயாரிப்புகளின் தரத்திற்கு காரணம் முதல் தரமான மூலப்பொருட்கள் |
| நிரு பிராண்ட்® Niru Brand | தயாரிப்புகள் கனடாவின் சுகாதார விதிகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படுபவை |
| நிரு பிராண்ட்® Niru Brand | தயாரிப்புகள் உணவுக்கு இணையற்ற சுவையளிப்பவை |
| நிரு பிராண்ட்® Niru Brand | தயாரிப்புகள் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தவை |

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

நிரு பிராண்ட்
தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand®
தயாரிப்புகளே.

போலிகளை வாங்கி
ஏமாறுதீர்கள்

தரத்தின் சின்னம்

Niru Niru

Niru Enterprises Inc,

Tel:(416) 299-4202

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும்
விற்பனையாகின்றன.




# பொறுப்பற்ற பத்திரிகையாளர் மீது சந்திரிகா கண்டனம்

பத்திரிகையாளர்கள் பொறுப்பற்ற விதமாக நடந்து கொள்வதால் பத்திரிகைகள் மீது விதிமுறைகள் அமுலாக்கப்படலாம் என்று சந்திரிகா தெரிவித்துள்ளார். தற்போதைய யுத்தம் பற்றிய செய்தி தரும் முறை பொறுப்பற்ற விதத்தில் உள்ளதாக அவர் குற்றம்சாட்டினர்.

'இந்த யுத்த நிலையை கடுமையானதாக நாங்கள் கருதுகிறோம். இதில் தொடர்பு சாதனங்கள் பொறுப்பான விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். இராணுவத்தின் இரகசியங்களை ஆய்வு செய்ய முயல்வது எதிரிக்கு சாதகமாக இருக்கும்' என்று அவர் சொன்னர்.

'மோசமான தேசிய நெருக்கடி ஒன்றில் தேசிய நலன்களுக்கு முரணான நிலையில் பத்திரிகைகள் தொடர்ந்தும்செயற்பட்டால் அரசாங்கம் அதைக் கவனத்தில் எடுத்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும்' என்று அவர் தெரிவித்தார்.

ஆயினும் நாங்கள் பத்திரிகையாளரைக் கொல்லப் போவதோ, அவர்களை விமானத்திலிருந்து கடற்கரை மீது தள்ளப் போவதோ இல்லை என்று குறிப்பிட்ட அவர் இது குறித்து நாங்கள் ஏற்கனவே உறுதிமொழி தந்திருக்கிறோம், ஆனல் தொடர்பு சாதனங்களில் உள்ள ஒவ்வொருவரும் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களுக்கான தேசிய தகவல் நிலையத்தில் நடைபெற்ற திறப்புவிழாவின் போது பேசிய சந்திரிகா இந்த வாரம் பத்திரிகை ஒன்றில் கொழும்பில் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் நிலை கொண்டிருப்பது பற்றி பத்திரிகை ஒன்றுவெளியிட்ட செய்தி பற்றிக்குறிப்பிட்டார்.

அத்துடன் இராணுவ அதிகாரிகள் பத்திரிகைகளுக்கு தகவல் வெளியிடுவதையும் அவர் கண்டித்தார். அது முடிவுக்கு வரும் என்றும் உறுதியளித்தார்.

2 ம் பக்கம் பார்க்க..

# பெண்கள், குழந்தைகள் உட்பட 42 சிங்களவர்கள் புலிகளால் கொலை

பெண்கள், குழந்தைகள் உட்பட 42பேரை புலிகள் கல்லரவ கிராமத்தில் வெட்டிக் கொன்றுள்ளனர். மீன்பிடிக் கிராமமான கல்லரவவில் கடந்த வெள்ளிக்கிழமை சுமார் இருநூறு புலிகள் நடத்திய தாக்குதல் கடந்த மூன்று வருட காலத்தில் புலிகள் சிவிலியன்கள் மீது நடத்திய முதலாவது தாக்குதல் இது என்று கூறப்படுகிறது. 65 குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தில் நடந்த கொலைகள் பற்றி செஞ்சிலுவைச் சங்கம் விடுத்த அறிக்கையில் 'எங்கள் பிரதிநிதிகள் ஆயுதம் தாங்கியவர்களால் கொல்லப்பட்ட பெண்களும் குழந்தைகளும் அடங்கிய 42 பேர்களின் உடல்களைக் கண்டனர்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மனித இயல்புகளின் அடிப்படை விதிகளுக்கு முரண்பட்ட விதத்தில்சிவிலியன் இலக்குகள், பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட எந்த தாக்குதலையும் செஞ்சிலுவைச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது' என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

பன்னிரண்டு பெண்களும் ஆறு குழந்தைகளும் இறந்தவர்களுள் அடங்குவார்கள். திருமலையில் உள்ள இந்தக் கிராமத்தில் உள்ள வீடுகளும் புலிகளால் எரிக்கப்பட்டன.

புலிகள் தற்போது இராணுவ நிலைகளை விடுத்து அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாக இராணுவம் கூறுகிறது. இதன் மூலம் கிராமங்களை பாதுகாக்கும் நிலைக்கு இராணுவத்தை தள்ளுவதன் மூலம் வடக்கில் உள்ள இராணுவ அழுத்தத்தை குறைப்பதே நோக்கம் என்று இராணுவஅதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

2ம் பக்கம் பார்க்க..

# சமாதான முயற்சியில் உதவ கனடா விருப்பம்

இலங்கையின் இனப்பிரச்சனை தீர்வதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உதவ கனடா விருப்பம் தெரிவித்துள்ளது. மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடங்க வைக்க உதவ கனடா முயற்சிக்கும் என்று கொழும்பில் கனடியத் தூதுவரகம் தெரிவித்துள்ளது.

ஆசிய பசிபிக் பகுதிக்கான வெளிநாட்டமைச்சர் ரேமண்ட் சான் மே 31ம் திகதி மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வருகிருர்.

'இலங்கையில் மீண்டும் இனப்பிரச்சனை ஆரம்பித்தது மிகவும் ஏமாற்றத்துக்குரியது. என் விஜயத்தின் போது சமாதானத்திற்கான கனடாவின் ஆதரவை தெரிவிப்பதுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான சாத்தியங்களை ஆராய்வேன்' என்றுசான் தெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சனை குறித்து சந்திரிகா, கதிர்காமர் ஆகியோருடன் பேசவுள்ளதாகவும் கல்விமான்கள், தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகளுடனும் பேசவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளால் கொலை...

அருகில் உள்ள இராணுவ முகாமைத் தாக்கிய பின்னர் புலிகள் இந்த கிராமத்தை தாக்கினர். கிராமத்திற்குள் வந்த புலிகள் கதவுகளைத் தட்டிய போது திறந்த மக்களை உடனடியாக சுட்டுக் கொன்றனர். முழு இரவும் நடந்த இந்த தாக்குதலின் பின்னர் வீடுகளுக்கு புலிகள் தீ வைத்தனர்.

இந்த தாக்குதல் இனிமேல் புலிகள் அப்பாவிகள் மீது நடத்தவிருக்கும் தாக்குதல்களின் ஆரம்பம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது. அத்துடன் தங்கள் இனத்தை சார்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக மட்டும் மக்களைக் கொல்வது உட்பட, அப்பாவி மக்களைக் கொல்வதை நிறுத்தும்படி சர்வதேச மன்னிப்புச் சபை புலிகளைக் கோரி வந்துள்ளது.

1949 ஜெனிவா ஒப்பந்தத்தின் மூன்றும் சரத்தின்படி தடுத்து வைக்கப்பட்டவர்கள், பகைமையுணர்வு கொண்டிராதவர்கள் மீது வன்முறைகள் நிகழ்த்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

# புத்த பிக்கு புலிகளால் கொல்லப்பட்டார்

கல்லரவ கிராமத்திற்கு நாற்பது மைல் தொலைவில் பொலநறுவ மாவட்டத்தில் வைத்து புத்தபிக்கு ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். திபுலகல தேரோ என்று அழைக்கப்படும் கித்தலகம சிறி சீலலங்கார தேரோ புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருடன் இவரது சாரதியும் கொல்லப்பட்டார். வழமையில் பத்து பொலிசாரின் பாதுகாப்பில் வருகின்ற அவர் அன்று விகாரையிலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ள தோட்டத்திற்கு சென்ற போது அங்கு தோட்ட வாசலில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த பிக்கு கடந்த ஒன்பது வருடங்களாக புலிகளால் பயமுறுத்தப்பட்டு வந்ததாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகின்றார். நரைத்த தாடியும் குறுகிய தலைமயிரும் கொண்ட இவர் கடுமையான புலி எதிர்ப்பாளராவர்.

# முகாம் மீது தாக்குதல்

கிழக்கில் தாராவிக் குளம் முகாம் மீது புலிகள் தாக்கி இருபது இராணுவத்தினரைக் கொன்றுள்ளனர். இந்த தாக்குதலை அடுத்து தப்பியோடிய இராணுவத்தினரைக் காப்பாற்ற ஹெலிகொப்டர்களும் விமானங்களும் அனுப்பப்பட்டிருந்தன.

இருநூறு பேர் கொண்ட இந்த முகாமில் அதிகாலை மீது புலிகள் நடத்திய தாக்குதலில் மீதி இராணுவத்தினர் காட்டுக்குள் தப்பியோடியுள்ளனர். இராணுவத்திற்கு உதவி புரிய அனுப்பப்பட்ட தொகுதியினர் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். காயமடைந்தோரைக் கொண்டு செல்ல வந்த ஹெலிகொப்டர்கள் மீதும் புலிகள் சுட்டனர்.

மேலும் பத்து இராணுவத்தினர் காயமடைந்ததுடன் 38 பேர் காணமல் போயுள்ளனர். சுமார் ஐநூறு புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் அதன் பின்னர் ஆயுதங்களை சூறையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் மீண்டும் இராணுவத்தின் கைக்குள் முகாம் வந்துள்ளதாக இராணுவம் கூறுகிறது.

## பத்திரிகையாளர் மீது..

'ஒவ்வொரு மந்திரிசபைக் கூட்டத்திலும் இது பற்றி பேசுகிறோம். தொடர்பு சாதனங்களின் மீது எந்த தடைகளையும் கொண்டு வர நாம் விரும்பவில்லை. ஆனால் எங்களை அவ்வாறான நிலைக்கு தள்ளாதீர்கள்' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

சில பத்திரிகைகள் செய்திகளைத் திரிப்பதாகவும் இராணுவ இரகசியங்களை வெளியிடுவதுடன் அரசாங்கம் தந்திரோபயங்களைக் கொண்டிருக்கவில்லை என்று கூறுவதாகவும் குறிப்பிட்ட அவர் சில பத்திரிகையாளர்கள் பெரும்பான்மைச் சிங்களவர்கள் மத்தியில் உணர்வுகளைக் கிளற முயல்வதாக குற்றம் சாட்டினார்.

பத்திரிகைச் சுதந்திரம் என்ற நாணயத்தின் மறுபக்கம் பொறுப்புணர்ச்சி, அதை பல தேசியப் பத்திரிகைகள் புரிந்து கொள்ளவில்லை என்று அவர் கூறினார்.

# வடக்கு கிழக்கு இணைப்புக்கு பௌத்த அமைப்புகள் எதிர்ப்பு

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படுவதற்கு பௌத்த அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், இளம் பௌத்தர்கள் அமைப்பு ஆகிய அமைப்புகள் இந்த அரசியல் மாற்றங்கள் நாட்டின் சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் முரணானவை என்றும் பெரும்பான்மை மக்களின் உரிமைக்கு பாதகமானவை என்று கூறியுள்ளன.

இது குறித்து தாம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ளதாக இந்த அமைப்பின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பில் நாட்டில் எந்தப் பகுதியையும் தமிழரின் பாரம்பரிய நிலமாக அரசு ஏற்றுக் கொண்டால் அதை எதிர்க்கப் போவதாகவும் வடக்கையும் கிழக்கையும் இணைத்தால், அல்லது இன அடிப்படையில் அவற்றைப் பிரித்தால் தான் அதையும் எதிர்க்கப் போவதாகவும் அந்த பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி முறையை ஒழித்து பாராளுமன்ற முறையைக் கொண்டு வரும் ஜனாதிபதியின் திட்டத்தை வரவேற்பதாக இந்த அமைப்புகள் கூறியுள்ளன.

# புலிகள் யுத்தத்தை தொடங்கியதற்கு பிரிட்டன் கண்டனம்

புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்ததற்கு பிரிட்டன் கண்டனம் தெரிவித்துள்ளது. புலிகளால் படையினர் மீது ஏப்ரல் 19ம் திகதி முதல் நடத்தப்பட்ட தாக்குதலை பிரிட்டன் கண்டிக்கிறது என்று பிரிட்டிஷ் தூதுவரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கிறது. அரசாங்கம் சமாதானத்திற்காக தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்துள்ளதற்கும் அரசியல் தீர்வு காண்பதற்காக தீர்மானம் கொண்டுள்ளதற்கும் பிரிட்டன் வரவேற்புக் கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டமான் மீது இந்திய எம்.பிக்கள் கண்டனம்

பிரபாகரனை பகவத் சிங்கிற்கு அமைச்சர் தொண்டமான் ஒப்பிட்டதை அடுத்து இந்தியாவில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பகவத் சிங்கை ஏற்றுக் கொண்ட இந்தியர்கள் ஏன் பிரபாகரனும் அவ்வாறான ஒரு போராட்டத்தை நடத்துகிறார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளனர் என்று தொண்டமான் கூறியிருந்தார். இதையடுத்து இந்திய மண்ணில் வெளிநாட்டு அமைச்சர் ஒருவர் இவ்வாறு கருத்து தெரிவிக்கலாமா என்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

ஆயினும் கொழும்பு வந்ததும் தன் கூற்றை தொண்டமான் நியாயப்படுத்தினார். பிரபாகரனுக்கு இந்திய அரசு உதவி செய்தது என்றும் அப்போது நரசிம்மராவே வெளிநாட்டமைச்சராக இருந்தார் என்றும் அப்போது விடுதலைப் போராளியாக இந்தியாவுக்கு தோன்றிய பிரபாகரன் இப்போது வித்தியாசமாக தோன்றுவது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் சந்திரிகா அரசு சமாதானத்திற்கு இப்போதும் தயார் என்று கூறிக் கொண்டே புலிகளின் தலைமையை குற்றம் சாட்டுகிறது என்றும் கண்டித்த அவர் தான் தன் சமூகத்தின் நலன்களைக் காக்கவே அமைச்சராக உள்ளதாக தெரிவித்தார்.

## பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியா கோரும்

பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையை மீண்டும் இந்தியா எழுப்பவுள்ளதாக சீன செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது. அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்திருப்பதால் இந்திய அரசு இது பற்றி பேச விரும்புவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சு முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த முறை சந்திரிகா இந்தியா சென்றிருந்த போது இது குறித்து அக்கறை காட்டவில்லை.

தற்போது பேச்சுவார்த்தை முறிந்தபடியால் மீண்டும் இலங்கை அரசு இது குறித்து அக்கறை காட்டக் கூடும் என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## பஸ் மீது புலிகள் தாக்குதல்

கிழக்கில் பஸ் ஒன்றின் மீது புலிகள் தாக்கி ஐந்து பேரைக் கொன்றனர். எட்டு பயணிகள் காயமடைந்தனர். தாழங்குடாப் பகுதியில் புலிகள் இந்த தாக்குதலை நடத்திய போது இரண்டு பொலிசாரும் கொல்லப்பட்டனர். இதில் ஒரு பொலிசார் சுகயீனம் காரணமாக வைத்தியசாலைக்கு சென்றவராவர்.

## யுத்தத்திற்கு நிதி சேர்க்க அரச நிறுவனங்கள் விற்பனை

தற்போதைய பொருளாதார, வரவுசெலவுத் திட்ட நெருக்கடிகளால் அரசாங்கம் யுத்தத்தை கொண்டு செல்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. ஆயினும் யுத்தத்திற்காக பெருமளவு பணத்தை கடனாக வாங்கப் போவதில்லை என்றும் பணத்தை அச்சிடும் நோக்கம் இல்லை என்றும் நிதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். ஆயினும் கடந்த பெப்ரவரி மாதம் பாதுகாப்பு செலவீனத்தை 300 கோடி ரூபாவால் குறைப்பதாக திட்டம் இருந்த போதும் தற்போதைய யுத்தத்தினால் அது சாத்தியப்படாது என்றும் அவர் தெரிவித்தார். சில தினங்களில் அரசாங்கம் யுத்தத்திற்காக பணத்தை திரட்டும் வழிகள் பற்றி அறிவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆயினும் அரசாங்கம் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கி அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு யுத்தத்தை நடத்த முயற்சிக்கலாம் என்றே கருதப்படுகிறது. அரசாங்கம் பணத்தை அச்சிட முயன்றால் பணவீக்கத்திற்கு வழிவகுக்கும் என்றும் ஏற்கனவே பணவீக்கம் பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

## புலிகள் விசவாயுத் தாக்குதலில் ஈடுபடலாம் என அச்சம்

புலிகள் விசவாயுத் தாக்குதலில் ஈடுபடலாம் என்ற அச்சத்தில் போர்முனையில் உள்ள வீரர்களுக்கு எப்படி விசவாயுத் தாக்குதலின் போது சிகிச்சை அளிக்கலாம் என்பது பற்றி கற்பிப்பதற்காக வைத்தியர்கள் அனுப்பி வைக்கப்பட்டுளளனர். இவர்கள் போர்முனையில் உள்ள வைத்தியர்களுக்கு கிருமிநாசினிகளை பொஸ்பேட்டு, மற்றும் இரசாயனப் பொருட்களுடன் கலந்து தயாரிக்கப்படும் விசவாயுத் தாக்குதல் நடத்தப்பட்டால் எப்படி சிகிச்சை வழங்குவது என்பது பற்றி பயிற்றுவிப்பார்கள். அத்துடன் பொலன்னறுவை, அனுராதபுரம், திருமலை, மட்டக்களப்பு முகாம்களில் உள்ள இராணுவத்தினருக்கு அனுப்புவதற்காக மருந்துகளும் அனுப்பப்பட உள்ளன.

## அமெரிக்க வானொலி நிலைய ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும் முயற்சி தோல்வி

வொய்ஸ் ஒப் அமெரிக்க வானொலி நிலையம் கட்டுவதற்கான ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட மசோதா முறியடிக்கப்பட்டது. 'இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்தால் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பலத்த பாதிப்பு ஏற்படும்' என்று வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்தார். ஆதரவாக நான்கு பேரும் எதிராக 125 பேரும் வாக்களித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம்

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பாதையில் நடமாட வேண்டாம் என்று இராணுவம் அறிவித்துள்ளது. அத்துடன் குடாநாட்டின் ஏழு உதவி அரசாங்க அதிபர் பகுதிகளிலும் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து மக்களுக்கு அறிவிக்கும்படி இராணுவம் அங்குள்ள அரசாங்க அதிபர்களுக்குத் தெரிவித்துள்ளது.

தொண்டமானாறில் ஆறு கிராமங்கள் மீது இரவு ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டதாக அரசாங்க அதிபர் கே.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இது குறித்து தனக்கு காலை பலாலி முகாமிலிருந்து அறிவித்தல் கிடைத்ததாகவும் இது குறித்து மக்களுக்கு தெரிவிக்க தான் முயற்சிகள் செய்துள்ளதாகவும் இவர் றெய்ட்டர் நிருபருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

# மோதலினால் வந்த மோதல்

மொரட்டுவவில் நடைபெற்ற விபத்து ஒன்றில் பதினான்கு பேர் கொல்லப்பட்டனர். ஜீப் ஒன்று பாதையில் சறுக்கி திரும்பிய போது அதை திருப்புவதற்கு மக்கள் உதவி செய்து கொண்டிருந்த போது அவர்களை பஸ் ஒன்று மோதிக் கொன்றது. இதனால் 22 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

மோதிய பஸ்ஸின் சாரதி விபத்தின் பின் ஓட்டம் பிடித்தார். இதையடுத்து வீதியின் ஓரமாக குடியிருந்த மக்கள் பஸ், ஜீப் இரண்டையும் எரித்தனர். இதை அணைக்க வந்த தீயணைக்கும் படை வாகனங்களையும் தாக்கினர். அத்துடன் பொலிசார் அப்பகுதிக்கு வருவதைத் தடுக்க வீதியில் கிடங்குகளையும் வெட்டியிருந்தனர். இதன் பின்னர் அதிகளவு பொலிசார் அனுப்பப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

# பூனகரியில் தாக்குதலுக்கு புலிகள் முஸ்தீபு

பூனகரி மீது புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தலாம் என்று இராணுவ உளவுப் பிரிவு தெரிவிக்கிறது. சுமார் மூவாயிரம் புலிகள் அப்பகுதியைச் சூழ்ந்துள்ளதாகவும் இராணுவத்திலிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் முப்பது கவசவாகனங்களை 50 கலிபர் துப்பாக்கிகள் பொருத்தி சூழ நிலைநிறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் ஆயுதங்கள் மட்டுமன்றி பிரேதப் பெட்டிகளையும் அப்பகுதிக்கு கொண்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

அருகில் உள்ள வீடுகள் சிறு வைத்தியசாலைகளாக மாற்றப்பட்டு அங்கு மருந்துகள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் உள்ள மக்கள் வெளியேறுமாறு கோரப்பட்டுள்ளனர். அதை விட மீனவர்கள் அப்பகுதிக்கு வர வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

சுற்றி வளைத்த நிலையில் பயிற்சிகள் நடைபெறுவதுடன் காயமடைந்தவர்கள், இறந்தவர்களைத் தூக்கிச் செல்வதற்கான பயிற்சியும் துணைப்படைக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

# பேச்சுப் போட்டி

வருடாந்தம் நடைபெறும் வானவில் பேச்சுப் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 15ம் திகதி ஏஜின்கோட் கொலிஜியேட்டில் நடைபெறும். ஐந்து பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில் பங்குபற்றுவோர் அனைவருக்கும் எதிர்வரும் ஜூலை 29,30ம் திகதிகளில் செடர்பிரே கொலிஜியேட்டில் நடைபெறும் வானவில் நிகழ்ச்சியின் போது பரிசுகள் வழங்கப்படும். போட்டியில் பங்குபற்றுவோர் தங்கள் வயதை உறுதிப்படுத்துவதற்கான அத்தாட்சிப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

பேச்சுப் போட்டிப் பிரதிகளை கொம்பியூட்டெக் இன்ரர்நாஷனல் (285 9941) அப்சராஸ் (412 6164) ராஜி ஸ்டோர்ஸ், ஏ.கே.இன்டர்நாஷனல் (536 2220) ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

# கொலை விசாரணை

சின்னையா ராஜன் மாமாங்கரன் என்ற இலங்கையர் கொலை செய்யப்பட்டது குறித்து நயாகரா பொலிசார் இலங்கைத் தமிழர்களிடம் இருந்து இந்தக் கொலையைத் துப்புத் துலக்குவதற்கு உதவிகளை கோருகின்றனர். 94,யூலை 29 அன்று பிம்ஸ்வில் பகுதியில் வீதியோரமாக உடல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து நயாகரா பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்தனர். எரிக்கப்பட்ட நிலையில் இருந்த இந்த உடலை அடையாளம் காண்பது சிரமமாக இருந்தது.

இதன் பின்னர் கம்பியூட்டர் மூலம் மெருகுபடுத்தப்பட்ட படங்கள் உலகெங்கும் அனுப்பப்பட்டு பின்னர் இந்த உடல் சின்னையா ராஜன் மாமாங்கரன் என்பவரின் உடல் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. முப்பது வயதான இவர் ரொறன்ரோவில் 90ம் ஆண்டில் இலங்கையிலிருந்து வந்தது முதல் பல இடங்களில் வசித்துள்ளார். ஏழு வயதான இவரது மகனும் மனைவியும் இலங்கையில் உள்ளனர். அவர்களுக்கு இண்டர் போல் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிசிசாகாவில் ஸ்ராண்டார்ட் றிப்பெயர் சேர்விஸஸ் என்ற நிறுவனத்தை 6160 நெதஹாட் ரோட்,யூனிட் 5ல் இயக்கி வந்தார். இவர் ஆகஸ்ட் ஆறும் திகதி முதல் காணுமல் போயுள்ளார். இவரது மரணத்திற்கான காரணம் பொலிசாரால் வெளியிடப்படவில்லை.

பொலிசார் இவர் பற்றியும் இவரது நிறுவனத்தில் வாடிக்கையாளர்களாக இருநதோர் பற்றியும் இந்தக் கொலை பற்றிய விபரங்களை அறிந்து அவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகின்றனர்.

இது குறித்து தகவல்கள் தெரிந்தோர் நயாகரா பகுதி பொலிஸ் சேவையுடன் 1 800 668 3911 என்ற இலக்கத்தில் 4200 தொடர் இலக்கத்துடனே, 1800 263 8477 என்ற இலக்கத்துடனே தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Yes, Your Hair Grows Back

## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி




## ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது

இந்த சிவப்பு நிறக் கிழங்கு இரத்த ஓட்டத்தை கூட்டுவதன் மூலம் மயிர் கொட்டுவதைக் குறைத்து புதிய மயிர் வளர்வதற்கு உதவுகிறது.
தலைமயிர் உதிர்வது பரம்பரையானது அல்ல. ஆண்களின் உடலில் தெஸ்தஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இரத்த ஓட்டம் குறைகிறது. பெண்களில் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டம் குறைகிறது. இருபது வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு ஐயாயிரம் பேருக்கு மேல் பரீட்சிக்கப்பட்டது இந்த குமிழ்.

**Tel:922-0478**
239 Carlton St
Toronto, Ont

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




***VITAMOL*** சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.றொபேட்டினால் தயாரிக்கப்பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD





உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

### CHATAK: CURRY EXCELLENT




**Chatak Madras Curry Powder** இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. **Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix** போன்றனவும் கிடைக்கும்.

### DR.ROBERT'S GLUCOSE




குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் றொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது. ஏனெனில் இது உடலினால் உடனடியாக [illegible]

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

**Universal Foods & Merchandise Co.**
**Toronto, Canada**
**(416) 535-8672**

அன்பளிப்புப் பொருட்கள், [illegible], இலங்கை உணவுப் பொருட்கள், [illegible] பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**BUDGET SUPERSAVINGS DISCOUNT**
**1340 Queen st west (East of lansdowne)**
**Tel:(416) 537-0394**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.ஆர்.கே மார்க்கட்

★ இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
★ பால் பழங்கள்,
உடன் மரக்கறி வகைகள்,
★ இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
★ கனடிய உணவுப் பொருட்கள்

## அனைத்தும் மலிவு விலையில்

★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்
★ CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET

31-35 St. Dennis Dr
(Don Mills/Eglinton)
(416) 421 3429




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொதிகையால் புண்பட்டிருக்கும் உலகத்தமிழர்களை குஷிப்படுத்த இக்கார்ட்டுன் வெளியிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கடன் பணி செய்து கடிப்பதே!




சிவதாசன்

ஒன்ராறியோ மாகாணத் தேர்தல் ஜூன் 8ம் திகதி நடைபெறவிருக்கிறது. மூன்று பிரபல கட்சிகளும் போட்டியிடுகின்றன. பெருந்தொகையான தமிழர்கள் இந்தத் தடவை வாக்களிக்கத் தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். அதை விடவும் இரண்டு தமிழர்கள் வேட்பாளர்களாகத் தேர்தலில் குதித்திருக்கிறார்கள். படிப்படியாக இம் மாகாணத்தினதும் எதிர்காலத்தில் கனடாவினதும் தலைவிதியை நிர்ணயிக்கின்ற பொறுப்பு எங்கள் கைகளிலும் கிடைக்கப் பெறலாம். இவையெல்லாம் நமது வளர்ச்சிப் படிகள்.

வளர்ச்சியுடன் வலியும் வந்து தான் தீரும். அவ்வப்போது நம்மிடையே நடைபெறும் விரும்பத் தகாத சம்பவங்கள் சிலருக்கு அருவருப்பாகத் தானிருக்கும். முதலாவது பரம்பரையினருக்கு, அது எந்த இனக் குழுவாகவிருந்தாலென்ன, இத்தகைய கசப்பான அனுபவங்கள் வந்தே தீரும். இவற்றையெல்லாம் யதார்த்த நிகழ்வுகளாக ஏற்றுக் கொண்டு வாழ்க்கையை நகர்த்திக் கொண்டு போவதே நம்மால் செய்யக் கூடியது.

ஏனைய சமூகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது சமூகத்தின் வளர்ச்சி படு வேகமான வளர்ச்சி. நிறவேலிகளைப் பிரித்தெறிந்து வெள்ளை இனத்தோடு சரிநிகராக வாழ இன்னும் நூற்றாண்டு கூடப் பிடிக்கலாம். இருப்பினும் இப்போதைக்கு நமது முன்னேற்றம் பெருமைப்படக்கூடியது.

இந்தத் தடவை தேர்தலில் என்.டி.பி. கட்சி சார்பில் ஒரு பெண்ணும் லிபரல் கட்சி சார்பில் ஒரு ஆணுமாக இரண்டு தமிழர்கள் போட்டியிடுகிறார்கள். கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் எவரும் போட்டியிடவில்லை. என்.டி.பி. கட்சி தொழிலாளரின் கட்சியாக இருந்துகொண்டு பல நடைமுறைக்கு ஒவ்வாத வெறும் புத்தகக் கொள்கைகளுடன் ஆட்சியேறி, யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு இறுதியில் இரண்டுங் கெட்டான் நிலையில் இருக்கிறது. இன்னுமொரு தடவை ஆட்சிக்கு வருமா என்பதில் பலருக்கும் பலத்த சந்தேகம். தமிழரைப் பொறுத்த வரையில் இக் கட்சி பல நன்மைகளைச் செய்திருப்பினும் அகதிகள் மருத்துவ சேவை விடயத்தில் பல நெருக்கடிகளை எம்மவர்க்குக் கொடுத்திருக்கிறது. மத்திய அரசுடனான பிரச்சினைகளில் எம்மைப் பலியாக்கிக் கொண்டதுதான் இவர்கள் செய்த தவறு.

லிபரல் கட்சியும் அதன் தலைவி லின் மக்லோட்டும் தமிழருக்கு உதவாத, தேவையில்லாத சங்கதிகள். பசுத்தோல் போர்த்த புலிகள். தமிழருக்கு மட்டுமல்ல ஏனைய நிறத்தவர்களுக்கும் எதிரான துவேஷமான பல சட்டங்களை உருவாக்கிய மத்திய லிபரல் கட்சிக்கும் மாகாண லிபரல் கட்சிக்கும் பெரிதாக பேதம் எதுவுமில்லை. ஏறிய ஏணியையே எட்டி உதைப்பவர்கள். நிறவாதிகளைத் தாஜா பண்ணுவதற்காக நிறவாதப் பத்திரிகை சாதனங்களில் ஒன்றும் மிதவாதப் பத்திரிகை சாதனங்களில் இன்னொன்றுமாக ததிங்கிணத்தோம் போடுகின்ற இக்கட்சியின் தலைவி அடிப்படையில் நேர்மையில்லாதவர். இவர்களுக்கு வாக்களிப்பதை விட என்.டி.பி. யினருக்கு வாக்களித்தால் இவ் வாக்குகள் தம் பிறவிப் பயனை அனுபவித்தவையாகும்.

மைக் ஹரிஸ் தலைமையில் இயங்கும் கன்சர்வேட்டிவ் கட்சி நீண்ட காலமாக ஆட்சியைப் பிடிக்கமுடியாமல் திண்டாடுகிறது. கடைசியாக இக் கட்சி பில் டேவிஸ் என்பவரை முதல்வராகக் கொண்டு ஆட்சியமைத்த போது பல அதிருப்தி தரும் சட்டங்களை நிறைவேற்றியபடியால் அடுத்த தேர்தலில் பதவி களையப் பெற்றது. தற்போது இது தீவிர வலது சாரிக் கொள்கையைக் கடைப் பிடிப்பதனால் மத்திய கட்சியான றிபோம் கட்சி ஆதரவை மறைமுகமாகப் பெற்றிருக்கிறது. இதை விடவும் பெரும்பாலான பத்திரிகை சாதனங்கள் வலது சாரிகளாகவிப்பதால் அவற்றின் ஆதரவும் இக்கட்சிக்குக் கிடைத்திருக்கிறது. தமிழர்களுக்கு இக்கட்சி பெரும் நன்மையைத் தரப் போவதில்லை. முன்னாள் பிரதமர் பிறையான் மல்றோனி மத்தியில் ஆட்சியில் இருந்தபோது தமிழர்களுக்கு பல நன்மைகளைச் செய்தார். ஆனால் மாகாண கன்சர்வேட்டிவ் கட்சி மல்றோனி சம்பந்தமில்லாதது. இவர்களது தீவிர வலதுசாரிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கு புதிய குடியினருக்கு பாதகமானதாக இருக்கலாம். ஆனாலும் புதிய குடியினரின் ஆதரவு இல்லாமலே இவர்கள் ஆட்சிக்கு வருவார்களேயானால் குறை சொல்லும் நாம் சிந்தித்தேயாகவேண்டும். ஆனால் நமக்கு வரும் ஆபத்து எப்போதுமே நண்பர்களிடமிருந்து தானே வருகிறது. அந்த வகையில் லிபரல் கட்சியைத் தான் நாம் நம்பக்கூடாது.

லிபரல் கட்சி சார்பில் ஸ்காபறோ–எல்ஸ்மியர் தொகுதியில் போட்டியிடும் திரு.கிருஷ் பார்த்திபன் தமிழருக்கு பெரிதளவாக அறிமுகமானவரல்ல. இருப்பினும் இவரது துணைவியார் நீட்டா பார்த்திபன் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகவே தமிழர் சமூகத்துக்கு நிறைய உதவிகளைச் செய்து வருபவர். எங்கள் சமூகத்தின் பெயரால் அரசாங்க மானியத்தில் தமக்குத் தாமே தாய் பிள்ளை குடும்பமென்று 'குடும்ப சேவை' செய்து வருகின்றவர்களுடன் ஒப்பிடும்போது நீட்டா பார்த்திபன் எங்கேயோ நிற்பவர். முகம் மலர வரவேற்று தமிழர்களை உபசரிக்கும் அந்த நல்ல குணத்துக்காகவும் சேவைக்காகவும் பார்த்திபனுக்கு எங்கள் வாக்குகளைப் போடவேண்டும். தாயகத்தோடு உறவு வைத்தாலே தங்கள் வியாபாரம் கெட்டுப்போகுமென்று நினைக்கின்ற பலரில் பார்த்திபனும் ஒருவர் தான். இருப்பினும் 'என் கடன் பணி செய்து கடிப்பதே'.

பார்த்திபனுக்காக ஸ்காபரோ–எல்ஸ்மியர் தொகுதியில் லிபரல் கட்சிக்கும் ஏனைய தொகுதிகளில் என்.டி.பி. கட்சிக்கும் தமிழர்கள் வாக்களிக்க வேண்டுமென்பதே எனது விருப்பம்.

# இந்திரா

எல்லோரும் ஏறி இளைச்ச குதிரையில சக்கடத்தார் ஏறி சறுக்கி விழுந்தாராம். திருமதி சுஹாசினி மணிரத்னம் நெறிச் செய்த இந்திரா படத்தைப் பார்க்க இந்தப் பழமொழியின் ஞாபகம் தான் நினைவுக்கு வருகிறது.

கமலஹாஸனின் தேவர்மகன் வெற்றியினால் ஏற்பட்ட குடும்பப் பாதிப்பும் மணிரத்னத்தின் வர்த்தக உந்துதலும் சுஹாசினியின் சொந்த பெண்நிலை வாதத்தின் சுயவிளம்பரத் தேவையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட மசாலாவுக்கு சாதீயமும் தேசீயமும் மணம் சேர்க்கப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

சமீப காலங்களில் அருவருக்க வைக்கும் இரத்தக் காட்டேரிகள் சினிமா வர்த்தகம் என்ற பெயரில் பச்சைக் கலைக்கு சிவப்பு வர்ணம் பூசிக் கொண்டிருக்கிறார்கள். மணிரத்னம், கமலஹாசன், சந்திரசேகர் என்று இப்போது சுஹாசினி மட்டும் போயிருக்கிறது. தேவர் மகனில் நாசரின் தலை வெட்டுப்படும் காட்சியில் கமலஹாசன் ஆத்திரத்தின் அதியுயர் எல்லைக்குள் நின்றுகொண்டு அந்தக் காரியத்தைச் செய்கிறார். கதைக்கும் காட்சிக்கும் இங்கே தொடர்பு பேணப்படுகிறது. கொலை செய்தபின் அது தவறு என்றும் அதற்காக வருந்துவதும் கமலஹாஸன் என்ற நடிகனால் உயிரூட்டப்பட்ட சம்பவங்கள்.

இந்திராவில் இதே போன்று கழுத்து வெட்டும் காட்சியில் கத்தியும் கழுத்தும் 'குளோஸ்–அப்' ஆகக் காட்டப் படுகிறது. தேவையில்லாத காட்சி தேவையில்லாத இடத்தில் வர்த்தகம் என்ற ஒரே தேவையின் நிமித்தம் புகுத்தப் பட்டிருக்கிறது.

கதையோ மசாலாக் கதை. இரண்டு வேறு சாதிக் கிராமங்களுக்குள் நடைபெறும் வழமையான சண்டை. அதைக் கலவர அந்தஸ்த்துக்கு உயர்த்தி கத்தி பொல்லுகளையும் கத்து–குழறல்களையும் 'தத்ருபமாகப்' படம் பிடித்து பணம் பண்ண எடுத்த ஒரு முயற்சி தான் இந்திரா. கதைக்கென்று காட்சிகளை உருவாக்காமல் காட்சிகளுக்காக கதைகளை மாற்றும் புதிய இயக்குனர்களில் மணிரத்னமும் ஒருவர். அவரது மனைவியும் அவரின் நிழல்தான் என்பதை அப்பட்டமாகக் காட்டியிருக்கிறார். களவாக வீடியோ பிரதிகள் வெய்யப்படமல் இருப்பதற்காகவே இரவு காட்சிகளை அதிகம் புகுத்துவதாக ரொறோண்டோ வந்திருந்த போது மணிரத்னம் சொன்னார். கதையோ காட்சிகளோ முக்கியமல்ல வர்த்தகமே முக்கியம் என்று நினைக்கின்ற ஒருவரை கலைஞர் என்று நாம் கருத முடியாது.

இந்திரா படத்திலும் தேவையில்லாத பல இரவுக் காட்சிகள் வருகிறது. பகலொளியில் இக் காட்சிகள் கதைக்கு மெருகூட்டியிருக்கும். எல்லாவற்றையும் விட மிக மோசமான நெறியாள்கை ஒலியமைப்பில்தான். பாத்திரங்களின் சம்பாஷணைகளை விடவும் பின்னணியில் இழையோடும் இசை அதிக சத்தத்தோடு இருப்பதால் கதை விளக்கங் குறைகிறது. படம் முழுவதும் இக்குறை வியாபித்திருக்கிறது. சிலவேளை இதுவும் கள்ள வீடியோப் பிரதிகளைத் தடுப்பதற்காக சுஹாசினி அடித்த 'ஈ அடிச்சான் கொப்பியோ '?. கணவன் ஒளியிலும் மனைவி ஒலியிலுமாக வீடியோக் கள்ளர்களை 'ஒலி'த்துவிடத் திட்டமிட்டது போல் தான் தெரிகிறது!.

தகப்பன் நாசர் தலைமையில் இயங்கிய கிராமத்தின் பொறுப்பை மகள் சுஹாசினி இந்திரா எடுப்பதாகக் காட்டி பெண்நிலை வாதத்தைப் பலவந்தமாக இழுத்து வந்து புகுத்த முனைந்து தோற்றுப் போயிருக்கிறார் சுஹாசினி. படத்தை விடவும் நிஜ வாழ்க்கையில் மிகச் சிறந்த முறையில் இதைச் செயலில் காட்டிச் சென்றவர் அன்னை இந்திரா காந்தி.

தேசீயக் கொடிகளைக் காட்டியும் இன, சாதிக் கலவரங்களைக் காட்டியும் பாமர மக்களைப் படிப்பிக்க சினிமாத் திரைகள் புறப்பட்டு அரை நூற்றாண்டுக்கு மேலாகி விட்டது. வங்காளத்திலுஞ்சரி தென்னகத்திலுஞ்சரி இம் முன்னெடுப்புக்களால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்தது எதுவுமேயில்லை. சாதிகள் அப்படியேதானிருக்கின்றன. இனக் கலவரங்கள் இப்போது தான் அதிகரித்து வருகின்றன. இந்த மசாலாக்களின் வருகையால் பாதித்தது உண்மையான கலைகளும் பொழுது போக்குகளுந்தான்.

பாபர் மசூதி இடிப்பு விவகாரமும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரங்களும் உக்கிரமடைந்ததற்குக் காரணம் அரசியல்வாதிகள் மட்டுமல்ல அவர்களின் பேச்சுக்களை திருப்பித் திருப்பி திரித்துத் திருத்தி மக்களுக்கு ஊட்டிய பத்திரிகை சாதனங்களுந்தான். மறந்துபோன விவகாரங்களை மீண்டும் மீண்டும் கிளறிக் கொள்வதன் மூலம் பழைய சந்ததியினரைக் கிண்டி விடுவது மட்டுமல்ல இவை பற்றி ஒன்றுமே தெரியாத புதிய சந்ததியினருக்கும் நஞ்சு ஊட்டப்படுகிறது. பத்திரிகை சாதனங்கள் மட்டுமல்ல சினிமாத் துறையும் இவ் விவகாரத்தில் சளைத்தவர்களல்ல. பம்பாய் திரைப்படம் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் நோக்கில் எடுக்கப் பட்டதாகவிருக்கலாம். ஆனால் அதைப் பம்பாயிலேயே திரையிட அனுமதிக்காததற்குக் காரணம் அது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்பதனால்தான். சாதி இன வேறுபாடுகள் பற்றி இன்னமும் பேசியும் எழுதியும் கொண்டிருப்பது அவை மறையாமலிருப்பதற்கு இன்னுமொரு காரணம். பம்பாய் இந்திரா போன்ற படங்கள்தான் வசூலைத் தேடித்தரும் என்று இவர்கள் ஏன் கருதவேண்டும்? பீம்சிங்கின் பாசமலர், பாலும் பழமும், சிறீதரின் நெஞ்சில் ஓர் ஆலயம், சுந்தரத்தின் வியட்நாம் வீடு, பாலு மஹேந்திராவின் அழியாத கோலங்கள் என்பன வெற்றிகளைத் தேடித் தரவில்லையா?

சமூகப் பிரக்ஞை என்பது முக்கிய சமாச்சாரந்தான். அதை அப்பட்டமாகத் திரைக்குத் தருவதற்கும் கலையுடன் குழைத்து திரையில் தருவதற்கும் வித்தியாசமிருக்கிறது. சாந்தி முகூர்த்தம் நிதர்சனமானது என்பதற்காக அறையில் நடப்பது அம்பலத்திற்கு வந்து தான் தெரிய வேண்டுமென்பதல்ல. கலைக் கண்களுக்கு திரைகள் அருவமானவை. அருவமான பாத்திரங்களுக்கு உணர்வு என்ற உயிரைக் கொடுத்து ஊடகமொன்றிற்கு வெற்றிகரமாக இழுத்து வரக்கூடியவனே உண்மையான கலைஞன்.

சுஹாசினி இந்த விடயத்தில் தோற்றுப் போயிருக்கிறார்!.

---

# ஆசிரியர்களும் கற்க இருக்கின்றது.

பாடசாலை முன்னேற்றமாக இருக்கின்றது என்றால் அந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற மாணவர்கள் முன்னேற்றமாக இருக்கிறார்கள் என்பது பொருள். மாணவர்கள் முன்னேற்றமாக இருக்கிறார்கள் என்றால் ஆசிரியர்கள் திறமையுடன் போதிக்கிறார்கள் என்பது பொருள். ஆசிரியர்கள் திறமையுடன் போதிக்கிறார்கள் என்றால் அதிபர் கொஞ்சம் கடுமையானவர் என்பது தெளிவு.

இப்படிக் கட்டுப்பாட்டுடன் விளங்கிய அதிபர்தான் இலக்கியச் செம்மல் நா.முத்தையா அவர்கள். இவர் நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாசாலை அதிபர். நேரம் பிந்தாது பாடசாலைக்கு வருபவர். நேரத்தை பொன்னாக மதிக்கும் வெள்ளைக் காரர்கள் கூட இந்த நேரவிசயத்தில் இவரிடமிருந்து நிறையக் கற்கவிருந்தது.

இவருடைய காலத்தில் ஒரு ஆசிரியர் ஒவ்வொருநாளும் நேரம் பிந்தித்தான் வருவார். அந்த ஆசிரியரை திருத்த வேண்டும் என்று ஆத்மீக வள்ளல் உள்ளூர நினைத்தார். எனவே அந்த ஆசிரியர் வரும் வரைக்கும் அவருடைய வகுப்புக்குள் சென்று மாணவர்களுக்கு படிப்பித்துக் கொண்டிருப்பார். அந்த ஆசிரியரும் பிந்தி வந்து வகுப்பறையின் வெளிவாசலில் நிற்பார். அவரைக் கண்டவுடன் ஆத்மீக வள்ளல் வெளியே சென்றுவிடுவார். ஒவ்வொரு நாளும் அந்த ஆசிரியர் பிந்தி வருவார். அவரைக் கண்டதும் ஆத்மீக வள்ளலும் வெளிச் செல்வார். பல நாள் இப் படித் தான் நடந்தது. ஆனால் அந்த ஆசிரியர் திருந்திய பாடா யில்லை. இதனைக் கண்ட அதிபர் நா.முத்தையா அவர் வகுப்பின் வாசலில் பிந்தி வந்து நின்றாலும் அவரைப் பார்க்காதவர் போல நின்று பத்து நிமிடம் அவரை வெளியே நிற்கவைத்துவிட்டு பாடம் எடுப்பார். சிலநேரத்தில் இருபது நிமிடம் முப்பது நிமிடம் என்று ஒவ்வொரு நாளும் நேரத்தைக் கூட்டிக் கொண்டு போனார். ஆசிரியர் திருந்தவில்லை. ஒருநாள் இப்படி ஆசிரியர் பிந்தி வந்து நிற்க, அதிபரான இவர் அவரைப் பார்த்துக் கொண்டே இரண்டு பாட மணித்தியாலம் மாணவர்களுக்குப் படிப்பித்தார். பின் வெளியேறிவிட்டார். அதிபர் கண்டும் காணததுபோல் நின்றது அந்த ஆசிரியருக்குப் பிடிக்கவில்லை. பக்கத்து வகுப்பறையினுள் நின்ற ஆசிரியரிடம் போய் சொன்னாராம் என்னை இரண்டு பாடம் கால் கடுக்க நிற்க வைச்சிற்றார் அதிபர் என்றாராம். அதற்கு அந்த ஆசிரியர் சொன்னாராம் "உனக்கு அறிவெண்டது கொஞ்சம் எண்டாலும் இல்லையா? நீ தொடர்ந்து பிந்தி பிந்தித்தானே வாறாய் உனக்கு மரியாதை தந்து நாகரீகமாக உனக்குச் சொல்ல நீ விளங்கிக் கொள்ளவில்லை. இப்பொழுது என்னென்றால் இப்படி வந்து என்னிடம் குறை விளங்குகின்றாய். நல்ல ஆசிரியர்களுக்கு இவைகள் எல்லாம் அழகில்லை" என்றாராம்.

"உபாத்தியாருக்கு அமைந்து நட"

"ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச் சிறந்த கருவி" என்ற நாவலரின் கருத்துக்கள் இப்படியான ஆசிரியர்களுக்கு நல்ல பாலபாடமே.

## தெளிதேனில் தெளிந்தேன்

**சிதம்பரம் ஞா.வடிவேலனார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு மனித உரிமைகளை மீறுகிறது என புலிகள் குற்றச்சாட்டு

இலங்கை அரசு மனித உரிமை மீறல்களைச் செய்வதாக புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். புலிகளின் தமிழ் ஈழத் தலைமையகம் விடுத்த அறிக்கை ஒன்றில் வடக்கிலும் கிழக்கிலும் அப்பாவி மக்கள் மீது அரசு தாக்குதல் நடத்துவதாக புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

புலிகள் கிழக்கில் அப்பாவிச் சிங்களவர்களை வெட்டிக் கொன்றதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சாட்டிய அதே வேளையில் புலிகள் அரசு மீதும் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடக்கே உணவு கொண்டு சென்ற வடபகுதிக் கடைக்காரர்களுக்கு சொந்தமான லொறிகள் இரண்டு இராணுவத்தினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன. செஞ்சிலுவைச் சங்கத்தினால் வடபகுதி மக்களுக்கு உணவு கொண்டு சென்ற கப்பல் ஒன்று ஊர்காவற்றுறையில் கடற்படையினரால் திசை திருப்பப்பட்டது. இந்த நடவடிக்கைகளால் வடக்கில் உணவுப் பொருட்களின் விலை நான்கு மடங்காக அதிகரித்திருக்கிறது. கிழக்கிலும் எந்த வர்த்தமானி அறிவித்தலும் இன்றி உணவுப் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இராணுவம் பனடோல், ஒரு கிலோவுக்கு மேற்பட்ட உணவு போன்றவற்றை பறிக்கின்றது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தொண்டமானாறு பகுதியில் ஷெல் தாக்குதல் நடைபெறுகிறது. பல வீடுகளும் கோயில் ஒன்றும் பாதிப்படைந்துள்ளன. பத்தாயிரம் பேர் அகதிகளாயுள்ளனர். மே 23ம் திகதி கிழக்கில் பொலிசாரின் நடவடிக்கையில் இரண்டு பெண்கள் கொல்லப்பட்டதுடன் 27 பொதுமக்கள் காயமடைந்தனர். தனது மகனை பொலிசார் கைது செய்வதை தடுக்க முயன்ற தாய் சுட்டுக் கொல்லப்பட்டார். பொலிசாரால் பலவந்தமாக கொண்டு செல்லப்பட்ட நால்வர் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள தென்னந்தோப்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொழும்பில் இரண்டாயிரம் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மீறல்களை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும் என்று புலிகள் கேட்டுள்ளனர்.

# புலிகளுடன் போரிட இலங்கைக்கு அமெரிக்கா உதவலாம்

இலங்கை அமெரிக்காவிடம் கோரியுள்ள ஆயுத உதவி குறித்து தாம் கருத்துக்கு எடுப்பதாக அமெரிகக் உதவி ராஜாங்க அமைச்சர் ரெுபின் ரபாயேல் தெரிவித்துள்ளார். புலிகளுடனான யுத்தத்திற்கு பயன்படுத்த ஆயுத உதவி செய்யுமாறு அரசாங்கம் வெளிநாடுகளைக் கோரியிருந்தது.

வடக்கில் உணவு வினியோகத்தை இழந்திருக்கும் இராணுவத்தினருக்கு வினியோகம் செய்வதற்கான கப்பல்களை அமெரிக்கா வழங்கக் கூடும் என்று அவர் தெரிவித்தார். இலங்கைக்கு யுத்த ஆயுதங்கள் வழங்குவதை அமெரிக்க கொள்கை தடுக்கிறது. ஆயினும் இவ்வாறான உதவிகளைச் செய்யக் கூடும்.

அரச சார்புப் பத்திரிகையான டெயிலி நியூஸிற்கு அளித்த பேட்டியின் போதே ரெுபின் இதை தெரிவித்தார். இந்த செய்தி வொய்ஸ் ஒப் அமெரிக்க செய்தி நிறுவனத்தினாலும் வெளியிடப்பட்டது.

சமீபத்தில் ராபினின் உதவியாளர் ஒருவரை திலகர் சந்தித்த போது புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டும் என்று அமெரிக்கா கோரியிருந்தது.

அமெரிக்கா இலங்கை இராணுவத்தினருக்கு நீண்ட காலம் பயிற்சி அளித்து வருகிறது. ஆயினும் 71ல் ஹெலிகொப்டர்கள் வழங்கப்பட்ட பின்னர் ஆயுதங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

# புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே அடுத்த தடவை பேச்சுவார்த்தை

அடுத்த தடவை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடததுவதாயின் அவர்கள் ஆயுதங்களை ஒப்படைத்த பின்பே பேச்சுவார்த்தை என்று அரசாங்கம் கூறியுள்ளது. 'பேச்சுவார்த்தைக்கான கதவு திறந்திருக்கிறது. ஆனால் புலிகள் தங்கள் ஆயுதஙகளை கீழே வைக்க வேண்டும்' என்று பாதுகாப்பு உதவி அமைச்சர் ரத்வத்தை தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் பேச்சுவார்த்தையில் பிரபாகரனும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கூறிய அவர் இனக்கலவரத்தை தூண்ட புலிகள் எடுக்கும் முயற்சி வெற்றி பெறாது என்றும் கூறினார்.

# படுகொலைகளுக்காக ஐரோப்பிய சமூகம் புலிகளைக் கண்டிக்கிறது

42 அப்பாவி பொதுமக்களை புலிகள் கொன்றதை ஐரோப்பிய சமூகம் கண்டித்துள்ளது. அத்துடன் புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது. பிரான்சில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கடந்த மூன்று வருடங்களில் புலிகள் முதல் தடவையாக அப்பாவி மக்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்றும் ஐரோப்பிய சமூகம் அதைக் கண்டிக்கிறது என்றும் அத்துடன் புத்த பிக்கு ஒருவரைக் கொன்றதையும் கண்டிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

# சிறுவர்களைக் கடத்தும் புலிகள்

இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகி விபசாரத்தில் ஈடுபடும் சிறுவர்களை புலிகள் தங்களுடன் சேர்த்துக் கொள்வதாக குழந்தைகள் நலன்புரி அமைப்பு ஒன்று குற்றம் சாட்டியுள்ளது. தெற்கில் கடற்கரைகளில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுடன் பாலியல் சேர்க்கையில் பயன்படுத்தப்படும் சிறுவர்களை புலிகள் இலகுவாகச் சேர்த்துக் கொள்வதாக எங்குமுள்ள குழந்தைகள், சுற்றுலா பாதுகாக்கும் அமைப்பைச் சேர்ந்த மொறின் செனிவிரத்தின குற்றம் சாட்டியதாக ரெய்ட்டர் தெரிவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பல் மேட்டில் பூத்த பூ

## தேடகம் எரிப்பின் முதலாண்டு நினைவு

ரொரன்ரோவில் வெலஸ்லி/பார்லிமன்ட் வீதிச் சந்திப்பில் அமைந்துள்ள "தேடகம்" நூல்நிலையம் 1994ம் ஆண்டு மே மாதம் 23 ந் திகதி விக்டோரியா தினத்தன்று நள்ளிரவு 1.30 க்கு இனந்தெரியாத, மனிதாபிமானமற்ற விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டு சாம்பலாக்கப்பட்டது.

உலக நாடுகளிலுள்ள சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஏராளமான நூல்கள் இந் நூல்நிலையத்தில் மக்களுக்காக வைக்கப்பட்டிருந்தன. அரசாங்க உதவியின்றி அங்கத்தவர்களின் சொந்த பணத்தில் இயங்கிவந்த இந் நூல்நிலையத்தை எரித்தவர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

இக் கோரச் செயலை கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை மேற்கொண்டனர் இக்கண்டன ஊர்வலத்தில் இலங்கையில் ஜனநாயகத்திற்கான இயக்கம், மனித உரிமைகளுக்கான இலங்கையர்கள், விழிப்பு, கிரியா குரல், தாயகம் ஆகியவற்றால் குறுகிய நேரத்துக்குள் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கு பற்றினர்.

தேடகத்தின் முன் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் ஒன்ராரியோ சட்ட சபை கட்டடம் வரை சென்றது. ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் தற்போதைய ரொரன்ரோ மேயர் திருமதி பார்பரா ஹோல் இந் நூலக எரிப்பை கண்டித்ததுடன் ரொரன்ரோவின் இவ்வாறான வன்முறைகள் நிறுத்த வேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தி கூறினார். இச்செயலைக் கண்டு கனேடியர்கள் கூட அதிருப்தி அடைந்தார்கள். இவ் ஊர்வலம் பற்றி ரொரன்ரோ ஸ்டார், சண் பத்திரிகைகளில் படங்களுடன் செய்தி வெளியிட்டதுடன் வானொலி நிலையங்களிலிருந்தும் செய்திகள் ஒலிபரப்பாகின. சபாலிங்கம் கொலை தொடர்பாக தேடகம் நடத்திய கண்டனக்கூட்டம் மற்றும் தேடகத்தின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தியுற்றவர்களின் செயற்பாட்டே இத் தீவைப்பு என அங்கு வந்த சிலரை மேற்கோல் காட்டி அந்த செய்திகள் அமைந்திருந்தன.

தேடகம் எரிந்து சாம்பலாகிபோய்விட்டது. இனி இந்த தேடகம் இயங்காது என எரித்தவர்கள் கணவு கண்டிருக்கலாம். ஆனால் "தேடகம் நூல்நிலையம் பொதுமக்களின் ஆதரவுடன் புனரமைக்கப்பட்டு மீண்டும் ஆகஸ்ட் 20 ம் திகதி 1994ம் ஆண்டிலிருந்து இயங்கிவருகின்றது. இந் நூல் நிலையத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கு தேடகம் புனரமைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக் குழுவுடன் சேர்ந்து அயராது உழைத்தவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். வாசகர்கள், பொதுமக்கள் தமது பங்கினை ஆற்றியுள்ளார்கள். எரித்தவர்கள் ஒன்றை மட்டும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். அழிக்கப்பட்டவை எல்லாம் அழிந்துபோகா. மீண்டும் சாம்பல் மேட்டில் எழுந்து நிற்கும் தேடகம் இதற்கு சான்று.

இளைஞர்களின் அயரா உழைப்பில் எழுந்து நிற்கும் தேடகம் தொடர்ந்து தமது சேவையை வெற்றிக்கரமாக நடத்த நாமும் முன்வருவோம். தேடகம் அண்மையில் விட்ட அறிக்கையொன்றிலிருந்து ஒரு சிறு பகுதி மறுபிரசுரமாகின்றது.

தற்போது தேடக நூல்நிலையம் புத்தகம், வீடியோ பிரதி இரவல் கொடுக்கும் பகுதியை மின்கணணி மூலம் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. நூல்நிலையத்தின் மாதாந்த செலவினம் (கிட்டத்தட்ட) 1750.00 கனடிய டொலர்களாகும். (இவற்றுள் வாடகை, மின்வாடகை, பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைபேசி வாடகை ஆகியன அடங்கும்)

தேடக நூல்நிலையமானது, இலங்கை இந்திய மற்றும் தமிழ் பேசும் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளிலிருந்தும் வெளிவரும் தரமான இலக்கிய சஞ்சிகைகளையும். செய்திப்பத்திரிகைகளையும் தருவித்து வாசகர்களுக்காக படிப்பதற்கு வைப்பதோடு, எந்தவித பக்கசார்புமற்று இயங்கிவருகிறது. இந் நூல்நிலையத்தைத் தொடர்ந்து திறம்பட இயக்குவதற்கு பொதுமக்களாகிய உங்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்கிறது. நிதியுதவி செய்யவிரும்புவோர் தயவுசெய்து "தேடகம்" (THEDAGAM) என்ற பெயருக்கு காசோலையாகவோ அல்லது மணியோடராகவோ அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

கணக்கறிக்கையை பார்வையிட விரும்புவோர் அல்லது மேலதிக விபரம் தேவைப்படுவோர் தயவுசெய்து கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு THEDAGAM<br>
566 Parliament St. Toronto Ont, M4X<br>
1P8, Canada<br>
(416) 975–4750

## தவிர்க்க முடியாதது

திறந்து விடப்பட்ட ஜன்னலூடு
வரும் காற்றில்
கவிதைக்கான தொடக்கத்தோடு கிடக்கும்
காகிதத்தாள்
படபடத்துக் கொண்டது.

இந்தக் கவிதை
என்றாவது ஒரு நாள் முடிக்கப்படும்

இன்னும்
என்னுள் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக்கான சொற்களை
இக் காகிதத்தில் பதிக்க முடியவில்லை.
இனி உனக்கு
எந்தவொரு வேளையும்
கிடைப்பது அரிது என்பதாய்
நாட்களும் கடக்கின்றன.

நான் ஏன் இதை எழுதி முடித்தாகவேண்டும்?

இந்த வாழ்வை
முழுமையாக புரிந்து கொள்ளவேண்டிய
தேவை இருப்பினும்
சிலவேளை அது புரியாவிட்டாலும்
இந்த நாளில்
இவ் வாழ்வின் மீதான
அழுத்தங்களை
நன்றாகவே உணர்ந்திருக்கிறேன்
அதனால்தான்
அவைகளை மீறி
இதை நான் எழுதியாக வேண்டும்.

இது யாருக்குமே
தேவையற்ற கவிதையாக
இருந்துவிட்டுப் போகலாம்
அதற்காய் நான் கவலை கொள்ளப்போவதில்லை
இன்று
வீசப்பட்டு
அலையும் இவ் வாழ்வு
என்னுடையதல்ல
இது எனக்கானதாய்
கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது
அதை நான் மறுத்தேயாக வேண்டும்
அதற்காய் இதை எழுதியேயாக வேண்டும்.

இன்றைய வரலாறு
வளம் கொழிக்கும் அற்புதமாய்
எழுதப்படுகின்றது
இந்த வாழ்வில் அவலங்கள்
மறைக்கப்பட்டு
வாழ்வை அச்சுறுத்துபவர்களுக்கு
புகழ்ச்சி பாடப்படுகிறது

அதனால்
இந்த வாழ்வின் அவலங்களை
எழுதியேயாக வேண்டும்
இந்த புகழ்ச்சிக்கானவர்கள் குறித்தும்
புகழ்பவர் குறித்துமாக
விமர்சனம் எனக்குண்டு
அதற்காய்
நான் இதை எழுதியேயாக வேண்டும்.

கொலையிலும்
மரணத்தின் அச்சத்திலும்
இனியொரு சொல்
வெளிவராதென்பதாயின்
கவிதைக்கான
இந்தச் சொற்களை
நான் எழுதியேயாக வேண்டும்.

**பா.அ.ஜயகரன்**


# Blue Line Printing

**கண்ணைக் கவரும்
வண்ணங்களில்
தரமான
அச்சுவேலைகளுக்கு.**

☞குறைந்த விலை
☞குறித்த தவணை
☞குன்றாத தரம்

**Tel:299 5979
Fax:299 8171**

**335 Nugget Ave, Unit 6**
(McGowan/Sheppard)
Scarborough

**Books, Flyers, Business Cards, Wedding Cards**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இதயம் ஒன்று மரத்து விட்டது



அவசரம் அவசரமாக தன் பாடக் குறிப்பை எடுத்து வதனாவிடம் நீட்டினான் வேணு. அதை வாங்கி மேசையின் ஓரத்தில் வைத்த வதனா "ஏது வந்தவர்களுக்கு ஒரு ரீயாவது போட்டுத்தர மனம் வரல்லேயோ" என்றாள். தன் தவற்றை உணர்ந்த வேணு அவசரமாக உள்ளே போய் ஸ்டாலில் தண்ணியை ஊற்றி வைத்து விட்டு திரும்பினான். அவன் எதிர்பாரத விதமாக பின்னால் நின்ற வதனாவின் உடலில் இடித்துக் கொன்டான். இதை அசட்டை செய்யாத வதனா வேணுவைப் பார்த்து காதல் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன வேணு? என்றாள். இந்தக் கேள்வி வேணுவை உலுக்கி விட்டது. காதல் தெய்வீகமானது, உண்மையானது என்றான். படாரென இதை நீங்கள் நம்புகிறீர்களா என்றாள் வதனா. நம்பிக்கை மட்டுமல்ல அதுதான் நியதியும் கூட அடித்துக்கூறினான் வேணு. இதழோரம் நகைத்துக் கொண்டாள் வதனா.

அடுத்து அவளது பார்வை டேப் ரெக்கோடரில் விழுந்தது பட்டனை அழுத்தினாள். ஆயிரம் மலர்களே மலருங்கள்..... என்ற இனியப்பாட்டு மிதந்து வந்தது. இந்தப்பாட்டு ரொம்பப் பிடிக்குமோ? என்றாள். ஆம் என்பது போல் தலையாட்டினான் வேணு. கதையோடு ரீயைப் போட்டு அவளிடம் நீட்டினான். அவன் அவளும் நீட்டினாள் கையை. ஆனால் பெரும் சத்தத்துடன் டம்ளர் நிலத்தில் விழுந்தது. வதனாவின் உடுப்பெல்லாம் ரீ கொட்டிவிட்டது. திடுக்கிட்ட வேணு அவரசமாக டவலை எடுத்து ரீ கொட்டுப்பட்ட இடத்தை துடைத்து விட்டு நிமிர்ந்த போது வதனா வைத்த கண் வாங்காமல் அவனையே பார்ப்பதைக் கண்டு வெட்கமாகப் போய்விட்டது.

வதனா அவனை ஒட்டினாற் போல் வந்து வேணு என்றாள். என்ன என்பது போல் பார்த்தான். அவள் என்னை விரும்புகிறாயா வேணு என்றாள் தணிந்த குரலில். ஆமென தலையாட்டினான் வேணு. வதனா அவனின் கைகளைப் பற்றினாள். அப்போது வெளியில் யாரோ வரும் சத்தம் கேட்டது. சோமுதான் உள்ளே வந்தான். வந்தவன் வேணுவையும், வதனாவையும் கண்டவன் தன்னை சுதாகரித்துக் கொண்டு கேட்டான். அடடே இருதுருவங்கள் ஒரு இடத்தில் சங்கமம் ஆகினாப் போல இருக்கே என்றான். சந்தர்ப்பமும் சூழ் நிலையும் அப்படியாகி விட்டது என்றான் வேணு.

**இரா.தணி**

சோமு இருவரையும் மாறி மாறிப்பார்த்து விட்டு, நான் இங்கு இருப்பது இடைஞ்சல் போல் தெரிகிறது, சற்று வெளியே போய் வருகிறேன் என்றவன் இருவரின் பதிலைக் கூட எதிர்பாராமல் வெளியேறிவிட்டான்.

புரிந்துணர்வு உள்ள மனிதனை இப்போதுதான் காண்கிறேன் என்றாள் வதனா. உண்மைதான் என்ற வேணு பிறப்பிலேயே பழிவாங்கும் எண்ணம் கொண்டவனும், வளர்ச்சியிலேயே பழிவாங்கலையே கொள்கையாக உள்ளவனும், உள்ள இந்த நாட்டில், மன உள்ளங்களின் புரிந்துணர்வை மதிக்கும் மனிதர்களும் ஒரே இடத்தில் வாழ்கிறார்கள் என்றால் காரணம் என்றோ ஒரு நாள் எம் மக்களுக்கு ஒரு உண்மையான சக்தி பிறக்கப் போகின்றது என்பதுதான் அர்த்தம். "நீங்கள் என்ன தத்துவவாதியா?" என்றாள் கேலியாக. எப்படியாவது எடுத்துக் கொள் என்றான் வேணு.

"உங்கள் மனம் கொந்தளிக்கின்றது அப்படித்தானே" என்றாள் வதனா. "கடல் கொந்தளிக்கும் போது சத்தமாவது கேட்கும் ஆனால் மனம் கொந்தளிக்கும் போது...." இழுத்தான் வேணு. இப்படியான நிலை அவனுக்கு ஒரு முதல் பாடம் அனுபவமே புதிதாக இருந்தது.

என்ன சொல்வது என்றே வேணுவுக்குத் தோன்றவில்லை. மனம் நிகழ்ச்சியை வெறுப்பது போலவும் இருந்தது. ஆனால் ஒரு வித இன்ப அலைகள் உடலில் பாய்ந்து பரவுவது போலவும் இருந்தது. அவனின் உள்ளத்தில் ஒரு வேகம் இப்படியே இவளைக் கட்டியணைத்தால் என்ன? இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. ஏதோ ஒரு பெரிய திட்டத்தோடுதான் வதனா வந்தாள். அவனைத் தனிமையில் சந்தித்தாள் என்ற உண்மை அப்போது அவனுக்குத் தெரிய நியாயம் இல்லை.

தன் தலையைச் சாய்த்து விழிகளை காந்த சக்தியாக்கி அவனைப் பார்த்த அந்த ஒரே பார்வையில் வேணு கிறங்கியே விட்டான். மெதுவாக அவனை நெருங்கிய அவன் அவளின் கரங்களைப் பற்றினான். அவள் எந்த வித படபடப்பும் இன்றி அப்படியே நின்றாள் அவளின் தளிர்விரல்களை உதட்டில் பதித்து முத்தம் கொடுத்தான் வேணு. அந்த ஒரு கணத்தில் தன் வாழ்க்கையில் என்றுமே கண்டிராத ஒரு இன்ப எல்லைக்கு அவனது மனநிலை தள்ளப்பட்டிருந்தது. அவனது முறைப் பெண்ணான அத்தை மகள் சுகுணா கூட அவன் பக்கம் அருகே நின்ற போது கூட ஏற்படாத உணர்வு அலைகள், வதனாவின் கையைப் பற்றியபோது ஏற்பட்ட இன்ப ஊற்றுக்கள் இதயத்தில் இருந்து கொந்தளித்து சொல்ல முடியாத வேகத்துடன் வேணுவின் முகத்தில் கொந்தளித்தது.

தன்னிலையை மறந்த வேணு, வதனாவை தன் பலம் கொண்டவரை தன் மார்போடு அணைத்துக் கொண்டான். வதனாவோ ஏதும் அறியாதவள் போல், அவனின் செய்கைகளுக்கு மறுப்பே இல்லாமல் நின்றபோதுதான் சோமு மீண்டும் உள்ளே நுழைந்தான். இது வேணுவுக்கு பெரும் எரிச்சலாகப் போய்விட்டது.

மன்னிக்க வேண்டும் நீங்கள் இருவரும் இந்த நிலையில் இருப்பீர்கள் என நான் கனவிலும் எண்ணவில்லை என்றான் சோமு.

வதனா தன்னை சரிப்படுத்திக் கொண்டு நீங்கள் நினைப்பது போல் இங்கு எதுவும் நடக்கவில்லை ஏதோ நானும்–வேணுவும் பிறண்ட்ஸ். அவ்வளவுதான் என்றபடி கேள்விக்குறியுடன் வேணுவைப் பார்த்தாள். தன்னை ஒரு கட்டுப்பாட்டுள் கொண்டு வந்த அவன் மௌனமாக நிற்க, வதனா பை....பை...என்றபடி அறையை விட்டு வெளியேறினாள்.

சோமு மெதுவாகச் செருமினான். சோமுவையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த கண்வாங்காமல் பார்த்தான் வேணு அதில் எத்தனையோ கேள்விக்குறிகள் இருப்பது போல் பட்டது சோமுவுக்கு. தன்னைச் சரிப்படுத்திக் கொண்ட சோமு பேச்சை ஆரம்பித்தான்.

இதுவரை காலமும் காதலில் பெண்மைதான் விழித்துக் கொள்ளும் என்று படித்திருக்கிறேன். ஆனால் இன்று ஒரு ஆண்மையும் விழித்துக் கொண்டதை கண்டேன் என்றான் சோமு.

நீ என்னைக் குத்தாமல் குத்திக் காட்டுகின்றாய். என்னை ஒரு வேற்று மனிதனாகவா கணக்கிடுகிறாய் சோமு என்றான் வேணு.

இல்லை நண்பன் என்ற முறையில் என் மனதில் பட்டதை அப்படியே கூறினேன்.

அப்படியானால் நான் என்னை மறந்தது தப்புத்தானே.

நீ அப்படி எண்ணலாம். வதனாவும் இதற்கு உடந்தையாகத்தானே இருந்தாள். அப்படியானால் இத் தப்புக்கு வதனாவும் நீயும்தான் காரணம் என்றான் சோமு.

காரணம் ஆயிரம் இருக்கு சோமு. வகுப்பில் சில நாட்களாக வதனாவின் பார்வை என்னை அடிக்கடி ஃபலோ பண்ணிக் கொண்டே இருக்கு. என்னுடன் கதைக்க விரும்பினாள் நோட்டுப் புத்தகத்தைச் சாட்டாக வைத்துக் கொண்டு என் இருப்பிடத்துக்கே வந்து விட்டாள். திடீரென ஏற்பட்ட இந்த உறவை ஏற்க முடியுமா என்பதுதான் என் பிரச்சனை என்றான் வேணு ஒரு நீண்ட பெரு மூச்சுடன்

நீ சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. திடீரென வந்த வதனா உன் வெறி கொண்ட அணைப்பை தட்டிக் கழிக்கவில்லை. உன்னுடன் ஒட்டிக் கொண்டாள். காரணம் ஒன்றாகத்தான் இருக்க முடியும் அது அவள் உன்மீது அளவிலாத காதல் கொண்டிருக்கிறாள் என எடுக்கலாம். வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது ஒரு பெண் தன் வெட்கத்தை மறந்து ஆடவனுடன் அவன் அணைப்பை ஏற்கின்றாள் என்றால் அது அவள் அவன் மீது கொண்ட அளவிலாத அன்பைக் காட்டுகின்றது. ஒரு பெரிய பிரசங்கத்தையே சோமு செய்து விட்டான்.

சோமு சொல்வதை வேணுவினால் ஏற்க முடிந்தது. தன் அத்தைமகள் கூட தான் கிராமத்துக்கு போகும் போதெல்லாம் அவனுடன் ஒட்டி உறவாடத்துடித்தாள். அவன் அருகே அமர்ந்து பேச வேண்டும் எனத் துடித்தாள். எத்தனையோ கனவுகளை மனதில் தேக்கி வைத்து வேணுவின் அன்புக்கும், அணைப்புக்கும் ஏங்கினாள். இவை யாவும் வேணுவுக்குப் புரிந்தும் புரியாமல் நடந்து கொண்டான். தன்னுள் ஒரு வெறிவராது பார்த்துக் கொண்டான் காரணம் என்னவென்று யோசித்தான். அதுதான் வதனாவை மனத்துள் வைத்து புகைந்து கொண்டிருந்த ஒரு ஆசையோ என எண்ணினான் அவன். பெண்கள் எத்தனையோ ஆண்களைக் காண்கிறார்கள். அதே போல் ஆண்கள் எத்தனையோ பெண்களைக் காண்கின்றார்கள். ஆனால் இவர்களின் அடி மனங்களில் ஆசைகள் உருவெடுத்தாலும் வெளிக்காட்ட முடியாது. ஒரு ஆணும் பெண்ணும் சந்தர்ப்பம் கிடைத்தால் தானே தம் உள்ளக் கிடக்கையை பரிமாறிக் கொள்ள முடியும். ஆனால் வேணுவும் வதனியும் கிடைத்த தனிமையை இப்படி அமைத்துக் கொண்டதில் தப்பில்லைத்தான்.

காவியக்காதலும், தெய்வீகக்காதலும் பெண்களை அடிமைப்படுத்தி விடுகின்றது. அன்பு எனப்படுவது மனித இனத்துக்கெல்லாம் ஒன்றானது ஆனால் காதல் ஒரு. பெண்ணடிமைத்தனத்தையும் சில இடங்களில் ஏற்படுத்திக் கொள்கின்றது. ஆண்வர்க்கம் பெண் இனத்தை அவளின் மென்மையை புரியாமல் விலங்கிட்டு வீட்டில் பூட்டிவைக்கின்றது பெண் எனக்குரியவள் ஆகிவிட்டால் அவள் வேறு ஆடவருடன் பழகவோ, அன்னியோன்னியத்துடன் பழகவோ, ஆடவர்களின் மனம் மறுக்கின்றது என்றுகூறினான் பாரதி "பெண்ணைப் வீட்டுள் பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதன் இறந்துவிட்டான்" கூறினான். ஆனால் அவன் இறந்துவிடவில்லை. வாழையடி வாழையாக மனிதன் பெண்ணை அடிமைப்படுத்தி வாழவே துடிக்கின்றான் இதனால்தான் குடும்ப வாழ்க்கை கூட சில சமயங்களில் விரிசல் ஏற்பட்டு விடுகின்றது.

புரிந்துணர்வு இருபகுதிக்கும் இருக்க வேண்டும். திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. இது உண்மையா அல்லது பொருளை திருடுவதற்கு வசதியாக வைக்கும் உரிமைகாரன் தான் என்பது உண்மையா? இரண்டிலுமே உண்மை இல்லை. எம் மனங்களில் இருக்கும் மனச்சாட்சிதான் எல்லாவற்றிற்கும் காரணம் மனச்சாட்சி எவருக்கு உண்டோ அங்கே எந்தத் தப்புத்தண்டாவும் நடக்க இடமில்லை.

வேணுவின் வாழ்க்கையின் பிற்பகுதியில் ஏற்பட்ட விபரீதங்கள் கூட அவனை இவ்வளவு தூரத்துக்கு மாற்றும் என்றுஎவரால்கூட சிந்தித்துப் பார்க்க முடியாத விடயமாகும். அவன் கூட வாழ்க்கையை வளமாக்கி வாழத்துடித்தவன் தான் ஆனால்.... அது வேறுவிதமாகத்தான் அமைந்து விட்டதற்கு வதனாவை முழு பொறுப்பும் என காலம் கடந்தே அவன் உணர்ந்தாள். அந்த உணர்வுகள் மன்னிக்கக் கூடியதாக அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடியதா இதை நீங்களே தீர்மானியுங்கள்.

வாழ்க்கையின் நீரோட்டத்தில் எதிர் நீச்சல் போட வேண்டிய கட்டங்கள் வருவதுண்டு அதை வெற்றியடைய எல்லோரும் முயல்வதில்லை. வேணனை அவனின் முறைப் பெண், அத்தைமகள் கண்மூடித்தனமாகக் காதலித்தாள். அவனின் அன்புக்காக துடித்தாள். அவனின் காதலுக்காக ஏங்கினாள். அவனுக்காக காத்திருந்தாள். வதனாவின் காதலால் நிலை குலைந்து விட்ட வேணு அத்தை மகளின் ஆசைகளைப் புரிந்து இருந்தும் பட்டினத்துப் படிப்பு, பட்டினத்து வாழ்க்கை கல்லூரிக் காதலில் கொண்டு போய் விட்டதில் வியப்படைய ஒன்றுமில்லைதான்.

அன்று ஒரு நாள்.................. (தொடரும்)

## கொழும்பில் புகையிரத வேலைநிறுத்தம்

கொழும்பில் புகையிர நிலைய அதிபர்கள் வேலைநிறுத்தம் செய்ததால் ரயில்சேவைகள் பாதிப்படைந்துள்ளன. தங்களுக்கு சம்பள உயர்வு கோரி அவர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். அரசாங்கத்திடம் பல தடவைகள் கேட்டும் கடந்த மூன்று வருடங்களாக தங்கள் கோரிக்கைக்கு பலன் கிட்டாததால் வேலைநிறுத்தம் செய்வதாக அவர்கள் கூறியுள்ளனர். நீண்ட தூர புகையிரத சேவைகள், தபால் போக்குவரத்து என்பன ரத்துச் செய்யப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள 180 புகையிரத நிலையங்கள், முன்று கட்டுப்பாட்டு நிலையங்களிலேயே வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. அத்துடன் கொழும்பில் பெரும் வெள்ளம் ஏற்பட்டதால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இரவு பெய்த மழையினல் 9 சென்டிமீட்டருக்கு நீர் மட்டம் உயர்ந்ததால் பாதையில் பயணம் செய்வது சிக்கலாகியிருந்தது.

பிந்திய செய்திகளின்படி பதினெட்டு மணித்தியாலங்களின் பின்னர் சம்பள உயர்வு உறுதியளிக்கப்பட்ட பின்னர் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் வரலாறு

தற்போது பிரபாகரனின் முக்கிய கவலே தப்பித்துக் கொள்வதுதான். குட்டிமணி, தங்கத்துரையின் கைதுக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்க்கை சாத்தியமில்லாமல் இருந்தது. வழமையாக தான் மறைந்திருக்கும் இடங்களே பொலிசார் கண்டுபிடிக்கக் கூடும் என்று அவற்றை தவிர்த்துக் கொண்டார். நீர்வேலி வங்கிக் கொள்ளேயின் பின்னர் அவர் சிறி சபாரத்தினத்துடன் மன்னர் காட்டுக்கு சென்று அங்கு கொஞ்சக் காலம் மறைந்து வாழ்ந்தார். பின்னர் யாழ்ப்பாணம் வந்து அங்கு கிடைக்கக் கூடிய இடங்களில் உறங்கினர். பகலில் நடமாடுவதை தவிர்த்துக் கொண்டார்.

வரதராஜப்பெருமாள் அவருக்கு உதவி செய்ய முன்வந்து பிரபாகரன் கேட்டதற்கு இணங்க அவருக்கு பாதுகாப்பான ஒரு இடத்தை ஏற்பாடு செய்தார். பெருமாள் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து தன் தாயை அங்கு வசிக்குமாறு கூறினர். புலிகள் அதற்கான வாடகையைச் செலுத்தினர். பிரபாகரன் ஒரு போதும் அங்கு தங்கியதில்லே. ஆனல் விரும்பிய போதெல்லாம் வந்து போவார்.

பொலிசாரின் நெருக்கடி தொடரவே, ஜூன் 5ம் திகதி தன் நெருங்கிய சகாவான ரகுவை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த டெலோ முக்கியஸ்தரான சிவாஜிலிங்கத்திடம் தனக்கு பாதுகாப்பான இடம் ஒன்றை ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். சிவாஜி தாமதமில்லாமல் ஒரு இடத்தை ஒழுங்கு செய்தார். அது வல்வெட்டித்துறை முகாமுக்கு அருகில் இருந்தது. எனவே யாரும் அதைச் சந்தேகப்படவில்லே.

பிரபா அன்றிரவு பத்துப் பேருடன் ஒரு ஜி 3, ஒரு ஏ.கே 47, ஒரு எஸ்.எம்.ஜி, ஒரு துப்பாக்கி சகிதம் அங்கு வந்தார். அவர்களிடம் றிவோல்வர்களும் இருந்தன. அவர்கள் அனைவரும் தங்கக் கூடிய அளவு அந்த இடம் இருந்ததுடன் தனியான குளியலறையும் இருந்தது. யாரும் எந்த காரணத்துக்காகவும் வெளியே செல்லவில்லே. ஆனல் பிரபாகரன் அங்கு இருக்கும் நோக்கத்தில் நிற்கவில்லே. தன்னையும் நண்பர்களேயும் தமிழ்நாட்டுக்கு கொண்டு செல்லக் கூடிய நம்பிக்கையான வள்ள ஓட்டிகளே பெற்றுத் தரும்படி சிவாஜியைக் கேட்டார்.

83 வரை எந்த இயக்கத்திற்கும் சொந்தமான வள்ளம் இருக்கவில்லே. 'பெடியள்' ஓட்டிகளால் சில நேரங்களில் சந்தேகமின்றியும் மற்றும்படி நட்புடனும் கொண்டு செல்லப்பட்டனர். ஓட்டிகள் பாக்கு நீரிணையை நன்ருன அறிந்தவர்கள். வானிலே, மற்றும் கடற்படை, சுங்க அசைவுகள் பற்றியும் தெரிந்தவர்கள். அவர்கள் துணிச்சலானவர்கள். பல இயக்கத்தினர் அவர்களுக்கு பயந்தார்கள். ஒவ்வொரு தரமும் தமிழ்நாடு போக நூறு முதல் இருநூறு ருபா வரை அறவிடப்பட்டது. சில ஓட்டிகள் பணம் வாங்குவதில்லே. பின்னர் பல ஓட்டிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர்.

பிரபா குழுவினர் செல்ல வள்ளம் தயாரானது. ஜூன் 6ம் திகதி இரவு அவர்கள் சிவாஜியின் மறைவிடத்திலிருந்து புறப்பட்டனர். அவர்கள் வெளியேறும் தருணம் யாரோ வைத்திருந்த துப்பாக்கி வெடித்தது. குண்டு கட்டிலேத் துளைத்துக் கொண்டு சென்றது.

இரகசியம் காப்பதில் அக்கறை கொண்ட பிரபா கோபம் கொண்டார். அந்த சத்தம் அதிக தூரம் சென்றிருக்காது என்று உறுதியளித்த பின்பு தான் அமைதியடைந்தார். அவர்கள் புறப்படும் போது இன்னொரு பயங்கரக் கணமும் வந்தது. ஒரு இராணுவ ஜீப் லைட் எதுவும் இல்லாமல் வந்து கொண்டிருந்தது. பிரபா உட்பட எல்லோருமே நிலத்தில் படுத்துக் கொண்டனர். ஜீப் போன பின்னர் பிரபா எழுந்து ஜீப் போன திசையைப் பார்த்து விட்டு கரையோரம் நடந்தார். சில நிமிடங்களில் அவர் இந்தியா போய்க் கொண்டிருந்தார்.

தமிழ் நாட்டு வாழ்க்கையும் மலர்ப்படுக்கையல்ல. குட்டிமணி கைது செய்யப்பட்டதுடன் நீர்வேலி வங்கிக் கொள்ளேப் பணம் இல்லாது போனவுடன் அவர்களுக்கு நிலே மோசமாய் இருந்தது. ஆனல் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் சிலரும் சில காட்டு அதிகாரிகளும் மதுரையில் காட்டுப் பகுதியில் பயிற்சி முகாம் ஒன்றைத் தொடங்க உதவி செய்தனர்.

இந்திய விமானப்படையிலிருந்து இளேப்பாறிய ஒருவர் பயிற்சி வழங்கினர். கைத்துப்பாக்கிகளும் துப்பாக்கிகளுமே பயிற்சியின் போது பயன்பட்டன. அவர்களிடம் தானியங்கி துப்பாக்கிகளுக்கான தோட்டாக்கள் இல்லாததால் இந்த நிலே ஏற்பட்டது.

பிரபாவும் மற்றவர்களும் உணவிற்கு குறைந்தளவு பணமே செலவிட்டனர். அவர்களின் பொருளாளரான ஐயர் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாய்க்கும் கணக்கு கேட்பார். ஒவ்வொருவரும் செலவிடக் கூடிய தொகையாக பன்னிரண்டு ருபாய் வழங்கப்பட்டது.

அதே நேரம் யாழ்ப்பாணத்தில் புளொட் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலேயத்தை ஜூலேயில்

**இலங்கையின் புலிகள்**
**எம்.ஆர்.நாராயணசுவாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கியது. கிளிநொச்சி மக்கள் வங்கியை மூன்று மாதங்களின் பின் தாக்கியது.

அக்டோபர் 15, சீலன் காங்கேசன்துறை வீதியில் இரண்டு இராணுவத்தினரைக் கொன்றார். இலங்கை இராணுவத்திற்கு எதிரான முதலாவது தாக்குதல் இதுவாகும்.

82ல் உமாவின் வலதுகரமான சிவசண்முகமூர்த்தி சித்திரா அச்சகத்தில் புதிய பாதை வெளியிட்டுக் கொண்டிருக்கையில் சுடப்பட்டார். சீலனே இவரைச் சுட்டார் என்று நம்பப்படுகிறது.

பிரபாவுடனான மோதலில் தன்னோடு இருந்த கண்ணன் என்ற ஜோதீஸ்வரன், காக்கா என்ற துரைராஜா சிவனேஸ்வரன் ஆகிய இருவருடனும் இந்தியா சென்றார்.

சிவசண்முகமூர்த்தியின் கொலை சென்னையில் பெரும் பிரச்சனையைக் கிளப்பியது. ஈரோஸிலிருந்து பிரிந்து சென்ற பத்மநாபா கொலையைக் கண்டித்து அறிக்கை விடுத்தார்.

பிரபாவும் சபாரத்தினமும் பத்மநாபாவின் வீட்டுக்கு காரில் சென்ற போது அவர் அங்கு இல்லை. ஆனால் பிரபா வீட்டைச் சோதனையிட வேண்டும் என்று வற்புறுத்தினார். உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்ட போது துப்பாக்கியைக் காட்டினார்.

தற்போது உமா சண்டையிட விரும்பினால் பிரபாவும் அதற்கு தயாராகவே இருந்தார்.

பாவலர் பெருஞ்சித்திரனார் உமா, பிரபா மோதலை சமரசமாக்க முயன்றார். ஆனால் இருவரும் நேரடியாக பார்க்கும் சந்தர்ப்பம் வரும் போது பிரபா டெலோவுடனான உறவுகளை தலைமைப்பதவி பிரச்சனை காரணமாக துண்டித்து விட்டு புலிகளின் தன்னிகரற்ற தலைவரானார்.

மே 19ம் திகதி உமாவும் கண்ணனும் பாண்டிபசாரில் உள்ள உணவகத்திலிருந்து வெளியே வந்து மோட்டார் சைக்கிளில் ஏற சென்ற போது கண்ணன் பிரபாவையும் ராகவனையும் கண்டார். உமாவும் பிரபாவும் ஒரே நேரத்தில் துப்பாக்கியை உருவினர். ஆனால் பிரபா தான் முதலில் சுட்டார். ஆறு தடவை சுட்ட போதும் உமா தப்பி விட்டார். கண்ணனுக்கு ஐந்து காயங்கள் ஏற்பட்டன. கைது செய்யப்பட்ட போது அவருக்கு ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

பிரபாவும் ராகவனும் ஓட முயன்ற போது பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். ஆறு நாட்களின் பின்னர் புகையிரத நிலையத்தில் வைத்து உமா கைது செய்யப்பட்டார். அப்போதும் தன்னை மடக்க முயன்ற பொலிசாரை நோக்கி சுட்டார்.

தமிழ்நாட்டுப் பொலிசார் முக்கியமாகத் தேடப்படும் இருவரையும் கைது செய்து அவர்கள் மீது பல குற்றங்களை சுமத்தியது.

73ல் இலங்கை அதிகாரிகள் சென்னை சென்று குட்டிமணியை கைவிலங்குடன் கொண்டு வந்தனர். ஆனால் உமா, பிரபாவிற்கு தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் செல்வாக்கு இருந்ததால் நிலைமை வித்தியாசமாக இருந்தது.

இலங்கை அரசு மகிழ்ச்சியடைந்தது. உதவி பாதுகாப்பு அமைச்சர் வீரப்பிட்டிய பரிசுப்பணமான பத்து லட்சம் இந்தியப் பொலிசாருக்கு வழங்கப்படும் என்று அறிவித்தார். பிரபாவின் கைது அவரது இயக்கத்தினருக்கு பெரும் பின்னடைவாக இருந்தது. அவர்களில் பலர் தமிழ்நாட்டிலேயே இருந்தனர். அவர்களில் மூத்தவரான சுப்பிரமணியத்தை ஆலோசிக்காமலேயே கிட்டு, பண்டிதர், புலேந்திரன் உட்பட பலர் பிரபாவை நாடு கடத்துவதை தடுக்க திட்டமிட்டனர்.

சென்னையில் எல்.ஐ.சி கட்டடத்தின் மேல் ஏறி தங்கள் தலைவர் விடுவிக்கப்படா விட்டால் தற்கொலை செய்து கொள்வது என்று அவர்கள் திட்டமிட்டனர். இந்த வித்தியாசமான திட்டத்தைக் கேள்விப்பட்ட சுப்பிரமணியம் 'இந்த மடத்தனமான திட்டத்தைக் கைவிடுங்கள், பிரபாவை வெளியே கொண்டு வருவது என் பொறுப்பு. நாளைக்கு எப்படியாவது கொண்டு வருவேன்' என்று கூறினார்.

பேபி சுப்பிரமணியம் இந்த முயற்சியில் திட்டமிட்டு இறங்கினார். அதுவரையும் அவர் தான் தமிழ்நாட்டில் புலிகளின் பொதுத்தொடர்பு ஆளாக இருந்து தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களுக்கு போராட்டம் பற்றி விளங்கப்படுத்தி அங்கு ஆதரவு வலையமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார்.

பிரபா தமிழ்நாட்டில் இருந்த போதும் பின்னணியிலேயே இருந்து தன்னை வெளிக்காட்டிக் கொள்வதை தவிர்த்து வந்தார். நெடுமாறனிடம் எதையாவது செய்யும்படி பேபி கேட்டுக் கொண்டார்.

காங்கிரசிலிருந்து பிரிந்து காமராஜ் காங்கிரஸ் அமைத்த நெடுமாறன் சென்னையில் யூன் முதல் தேதி சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டினார். தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் இருவரையும் நாடு கடத்தக் கூடாது என்று அவர் கோரினார். தி.மு.க கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. எம்.ஜி.ஆர் பிரதிநிதி ஒருவரை அனுப்பியிருந்தார். சுப்பிரமணியம் பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

கருணாநிதி அமைதியாக இருக்கவில்லை. முதல் வருடம் தான் இலங்கைக் கலவரம் பற்றி அவர் பெரும் ஹர்த்தால் ஒன்றை நடத்தியிருந்தார். அவர்கள் இருவரும் நாடு கடத்தப்பட்டால் தூக்கில் இடப்படுவார்கள் என்று கூறி அதற்கு எதிராக பிரசாரம் செய்தார்.

தனது அரசியல் சிக்கலை உணர்ந்த எம்.ஜி.ஆர் பொலிசாரிடம் தணிந்து போகும்படி கேட்டுக் கொண்டார். பொலிசிலிருந்த அவரது ஆளான மோகன்தாஸ் பொலிசாருக்கு பரிசுப் பணத்திலோ, அவர்களை நாடு கடத்துவதிலோ விருப்பம் இல்லை என்று அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாரங்கள் விழுங்கும் விழுமியங்கள்

## அருண்

அன்று, திருமணத்தில் தன் கணவன் அணிவித்த வைர மோதிரத்தை அலுவலகத்தில் எல்லோருக்குமே காட்டிக் காட்டி பெருமைப்பட்ட பெண், அதே மோதிரத்துக்கு காப்புறுதியும் இருப்பதாக பெருமையடித்துக் கொண்ட பெண்: இன்று இங்கே வேலை செய்யும் இன்னொருவனுடன் ஓரிரவு தங்கி வரச் செல்கிறாளே!

நாங்கள் அதிர்ச்சியாகிப் போவோம். 'இவர்களுக்கு எல்லாம் என்னத்துக்கு கலியாணம்?' கேட்டுக் கொள்வோம்.

மறக்க வேண்டாம்! இதே மண்ணில், இதே சமூகத்தில் இதே வாழ்வியலில் தான் எங்கள் பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் இவர்கள் நாகரிகம் என்று சொல்லிக் கொள்ளும் வேடர் வழக்கங்களையே நாமும் மெச்சிக் கொண்டே இங்கு நிரந்தரமாய் தங்கிக் கொள்ள திடசங்கற்பம் பூண்டு கொண்டும் இவர்களாகவே வாழ்ந்து விட நாம் சிறுகச் சிறுகப் பழகிக் கொள்கிறோம்.

அண்மையில் பூங்காவில் மலசல கூடத்தில் பிடிபட்ட 'தன்னினச் சேர்க்கையாளர்கள்' எல்லோரும் திருமணமான ஆண்களே.

பெண்ணுக்கு ஆணும், ஆணுக்கு பெண்ணும் என்ற அடிப்படை வாழ்வியல் தத்துவங்கள், தலைகீழாகிப் போய்க் கொண்டிருக்கும் இந்த தேசங்களில் மனவேட்கை மனிதனின் சுதந்திரம் என்று இந்தச் சீரழிவுக்கு பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருக்கும் சட்டங்களுக்கு மத்தியில் கடவுளரையே கணவன் மனைவியாய், குடும்பமாய் காண்கின்ற எமது கலாசார மனதுகளின் வாழ்வுக்கான, வாழ்விடத்துக்கான அத்திவாரம்.

அண்மையில் இங்கே வந்தவர்களே, எம் கட்டுப்பாடுகளை மீறிக் கொண்டு டேற்றிங் என்று கொண்டு அலைவது கண் முன்னே தான் நடக்கிறது. இது வெறும் சல்லாபம் மட்டுமல்லாமல் படுக்கை வரை சென்றும் கருக்கலைப்புச் செய்தும்.. தொடர்கின்ற போது அடுத்த சந்ததி இங்கேயே பிறந்து கனடியர்கள் என ஆகி விட்ட சந்ததியரின் வாழ்வு முறை எம் பாரம்பரியங்களின் வழியிலா இருக்கப் போகிறது?

இங்கத்தைய வாழ்வு முறையெல்லாம் என்ன வாழ்முறை கணவன் மனைவியென்றோ, பெற்றோர் பிள்ளைகள் என்றோ ஆத்மார்த்தமான பிணைப்பு இங்கு எங்கே இருக்கிறது?

யாரோடும் கூடலாம், பிரியலாம் பின் யாரோடும் வாழலாம் என்பது போன்ற வேடர் கால வாழ்வு முறை சுதந்திரம் என்ற பெயருடன் கலாசாரமாகி விட்ட இந்த தேசங்களில் தங்கியே விடுவதற்கான எமது முடிவு சரியானதா?

இந்த நாட்டை விட்டு எப்போது போய்ச் சேரப் போகிறோம் என்ற தவிப்பு எம்மில் யாருக்கு இருக்கிறது? எம் நாட்டுப் போர் எமக்கெல்லாம் ஒரு சாக்கு. முடிந்தால் அங்கொருக்கால் போய் வர வேண்டும் என்ற நினைப்பு.

போய் வந்த பின் 'அங்கத்துச் சுடலையில் தம் உடல் எரியாது என மனம் சொல்லிக் கொள்வதாக கதை விட தைரியம் அதிகம் இங்கேயே தங்கி விட.

இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட எத்தனையோ பிரயத்தனங்கள் செய்து கொள்ளும் நாம் இங்கிருந்து கிளம்பி விட என்ன ஆயத்தங்கள் செய்து வைத்திருக்கிறோம்?

எம் நாடு சென்று வாழ முயல்வோரும் இங்கத்து சீரழிவுகளைத் தான் கொண்டு செல்லப் போகிறோமா?

எம் பிள்ளைகள் இங்கத்து நாகரீகத்துள் பலியாகிப் போகாமல் பாதுகாத்து எம் கட்டுக் கோப்பில் வைத்திருக்க எமக்கோ பயம், அல்லது இயலாமை. கூடவே இதையெல்லாம் சீர்செய்ய நேரமின்மை.

பெற்றோர் மேல் பிள்ளைகளுக்கு மதிப்பு, பயம் இருந்தால் எத்தனையோ பழக்க வழக்கங்களை நல்நெறி செய்து விட முடியும். ஆனால் துரதிஷ்ட வசமாக அது எல்லாம் இங்கு எங்கே?

கண்டிப்பு என்பது குற்றம் என ஆகி விட்ட இந்த தேசவழமையில் போதை வஸ்துப் பாவனை, தகாத பாலியல் உறவுகள், கற்பனை வழியான ஒரே பாலினச் சேர்க்கைகள், கருக்கலைவுகள் அல்லது அதனால் பிறக்கும் ஆரோக்கியமற்ற சந்ததி.. இவை எல்லாவற்றிலும் இருந்து எம் விழுமியங்களை இங்கு தக்க வைத்துக் கொள்ள முடியுமா?

பிள்ளைகள் மேலான கண்டிப்பு இவர்கள் வாதிடுவது போல வன்முறையல்ல.. ஒழுக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளே.

இங்கு கண்டிப்பு என்கையில் தொட்டதற்கு எல்லாம் அடி உதை என செயற்படும் அதீதமான போக்கை அல்ல..

இங்குள்ளவர்கள் சொல்லிக் கொள்வது போல பணிவாகப் புத்திமதிகள் சொல்லிக் கொள்வது பலனளிக்காது. குறிப்பாக சிறார்களுககு எல்லாவற்றையும் காரண காரிய விளக்கம் சொல்லி விளக்கவும் முடியாது. வாழ்வியலில் பலவற்றைக் கிரகித்துக் கொள்ளும் பக்குவம் அவர்களுக்கு இல்லை.

பின் ஒரு காலத்தில் தான் அப்பா, அம்மா தன்னைக் கண்டித்து, அதட்டி, வளர்த்தது இதற்காகத் தான் எனப் புரிந்து கொள்வார்கள். நாம் இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு கூர்வது போல.

இத்தகைய கண்டிப்புகளால் பிள்ளைகளுக்கு ஆத்திரம் பிறப்பாகும் என்று இவர்கள் கூறிக் கொள்வது சரியே. கண்டிப்பு தமது நன்மைக்கே என இப்பிள்ளைகள் விளங்கிக் கொள்ளும் பக்குவத்தில் இல்லை என்ற உண்மையையும் இவர்கள் கருத்தில் எடுத்திருக்க வேண்டும்.

மேலும் கண்டிப்பைத் தவிர வேறு வழியும் உசிதமாய் இல்லை.. இவர்களைச் சீர்படுத்த.

எமக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. எவ்வளவு காலம் துரிதமாய் எம் பிள்ளைகள் உரிய பருவம் வந்து அவர்கள் எம் கண்முன்னே எமது பிடியில் இருந்து வழுக முன், இங்கிருந்து நாம் அவர்களை நம் நாட்டோடு அழைத்துச் செல்வது. இரண்டாவது எமது விழுமியங்களை எல்லாம் களைந்து விட்டு இந்நாட்டோடு கலந்து கொள்வது.

முதலாவது சுலபமானதும் ஆரோக்கியமானதும் ஆகும். ஆனால் எமது போர் கால சூழல் கொஞ்சம் இடைஞ்சல் தரும்.

இரண்டாவது சிரமமில்லாதது போல தோன்றும். ஆனால் அதிலுள்ள நெருக்கடிகள் காலவோட்டத்தில் தான் உணர முடியும்.

நாம் ஊறி வளர்ந்த எம் கலாசாரங்கள், சட்டென கைவிட முடியாதவை. மனத்தளவில் பல தாக்கங்களை தாங்க வேண்டியிருக்கும்.

தங்களுடன் இவர்கள் எம்மை ஏற்றுக் கொள்வது இவர்களது மனத்தளவிலேனும் தூய்மையான நினைப்பாக இருக்காது. எமது நிறம் இதற்கொரு தூண்டுதலாயும் இருக்கும்.

பருவம் வந்த மகள், அதிகாலையில் புறப்பட்டவர்கள் சாமமாகியும் வரவில்லையே என்ற விசாரிப்பில் இறங்குகையில், அவள் கருச்சிதைவு செய்து கொள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இன்னும் மீளவில்லை என அறியவருகையில் அவள் வந்த பின்னர் கண்டிக்க முடியாது போகும். உரிய வயது அவளுக்கு என இங்குள்ள சட்டம் சொல்லும்.

ஆனால் மனதில் ஏற்படும் பாரிய தாக்கங்களை தாங்கிக் கொள்ள பெற்றோராகிய நாம் தயாராகவும் இருக்க வேண்டும். முடியுமா இது?

வயது வந்த பிள்ளைகள் அங்கங்கே அவ்வப்போது தங்கிக் கொள்வதைக் கண்டு கொள்ளும் போது எமது மனங்கள் பதைபதைக்காமல் இருக்க முடியுமா? இருந்தே ஆக வேண்டும். இந்தக் கலாசாரத்துள் நாம் கலந்து கொள்ள வேண்டுமென்றால் இதையும் தாங்கும் பக்குவம் கொள்ள வேண்டும்.

மகன், மகன் என்று நீங்கள் விரும்பிப் பெற்றெடுத் மகன்மாரிடமிருந்து வேதனைகளையே பெறப்போவதை இப்போதிருந்தே அனுமானித்துக் கொள்ளுங்கள். பெற்றோரின் மேல் மதிப்பும் மரியாதையும் கடமையுணர்வுங் கொண்ட எம் போல் இங்கே எமது சந்ததி இருக்கப் போவதில்லை.

அங்கு கட்டுக்கோப்புடன் வாழ்ந்து பழகிய சில இளம் பெண்கள் இங்கு வந்ததும் பாடசாலைகளில், வெளியிடங்களில், தொலைபேசி மூலம் வீடுகளிலும் வாலிபர்கள் மேற்கொண்டு வரும் சேட்டைகள், 'டேற்றிங்' கேட்கும் தொந்தரவுகள், சில்மிசங்கள், அங்கே சேட்டைகள் போன்ற இம்சைகளைத் தாக்கிக் கொள்ளாது தம் பெற்றோரைக் கூட்டிக் கொண்டு இலங்கைக்கோ இந்தியாவுக்கோ திரும்பிச் சென்றிருக்கிறார்கள்.

சில பெற்றோர்கள் தம் பிள்ளைகள் தறிகெட்டு போகும் சாத்தியங்கள் இங்கு அதிகம் என்று அனுபவ வாயிலாக உணர்ந்து பிள்ளைகளை அழைத்துக் கொண்டு திரும்பிப் போயுள்ளனர்.

இன்னும் சிலர் தம் சிறார்கள் இன்னும் சிறிது காலம் படித்து காலம் வரும் போது நாட்டுக்கே மீளப் போய் விடும் சங்கல்பத்துடன் இருக்கிறார்கள்.

ஆனாலும் இன்னும் பலரோ எந்த விதச் சிந்தனையும் அற்று அன்றன்றுட வாழத் தெரிந்தவர்களாய் மட்டும், அல்லது இங்கு வீடு, களியாட்டங்கள் என்று சுகித்துக் கிடப்பதில் மட்டும் கவனமாய் இருப்பவர்களாய் இருப்பது கவலைக்கிடமானதாயே தெரிகிறது.

பிள்ளைகளில் அக்கறையோ, கவனிப்போ, கண்டிப்போ இல்லாமல் பராமரிப்பு இடங்களில் பிள்ளைகளை சேர்த்து விடுவதிலும் தாம் அவசரமாய் வேலைக்கு செல்வதிலுமே சிரத்தை கொண்டுள்ளனர்.

இவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்ட எம் கலாசாரங்களை அடுத்த சந்ததிக்கு கையளிப்பார்கள் என எப்படி எதிர்பார்ப்பது?

சந்ததி நலத்தையே தம் கடமையென கடைப்பிடித்து எம் மூதாதையர் வழிமுறையை இவர்களும் கடமையென கருத்திற் கொண்டிருப்பார்கள் என்று எங்ஙனம் எதிர்பார்ப்பது.

தமிழனின் சந்ததி இங்கு சுயம் இழந்து போய்க் கொண்டிருப்பதற்கான பொறுப்பை இவர்களே ஏற்க வேண்டும்.

குடும்ப உறவுகளைப் புறக்கணித்து விட்டு விரும்பிய போது விரும்பியவருடன் கூடி, விரும்பாத போதில் பிரிந்து அர்த்தம் கொள்ளாத ஆதிமனித வாழ்வு வாழ்நது கொண்டிருக்கும் இந்த தேசப் பரம்பரையுடன் எமது தமிழரும் சேர்ந்து கொள்ளக் கூடிய விபரீதம் இங்கே ஆரம்பித்து விட்டது.

ஆணுடன் ஆணும் பெண்ணுடன் பெண்ணும் கலவி கொள்வதும் திருமணம் செய்வதும் நாகரீகம் எனக் கூறிக் கொள்ளப் போகிற நாளைய கனடிய வழமையில் நம் சந்ததியும் பலியாகிப் போகும் விபரீதம் எமது கைகளில் இருந்தே நிகழப் போகிறது என்பதில் எமக்கு சம்மதமா?

முடிவு செய்ய வேண்டிய தருணம்: முடிவுகள் எம் கைகளில் இருந்தே வரவேண்டி இருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை
# நல்லூர் ராஜதானி நகர அமைப்பு

## வ.ந.கிரிதரன்

இலங்கைத் தமிழர்களின் பண்டைய நகர அமைப்பு பற்றி இதுவரை யாருமே கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. அரசர்களுடன் சம்பந்தப்பட்ட சரித்திரபூர்வமான தகவல்கள் பற்றிய ஆய்வில் கவனம் செலுத்துபவர்கள் தமிழர்களின் நகர அமைப்புக் கலை பற்றி கவனத்தை திருப்பாமல் விட்டது துரதிர்ஷ்டமானது. விளைவு நல்லூர் ராஜதானியாக விளங்கியதற்கு பல நூறு வருடங்களுக்கு முன்னால் தலைநகர்களாக விளங்கிய அனுரதபுரம், யாப்பாஹுவா போன்ற நகர்களைப் பற்றியெல்லாம் ஆய்வுகள் நடந்திருக்கையில் நல்லூர் நகர அமைப்பு பற்றிய தகவல்களைப் பெறுவதே அரிதாக இருக்கிறது. இந்நிலையில் என்னால் முடிந்த அளவுக்கு நல்லூர் நகர அமைப்பு பற்றி ஆராய்ந்திருக்கிறேன்.

நல்லூர் ராஜதானியின் நகர அமைப்பு பற்றி ஆராய வேண்டுமென்று நான் விரும்பியது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்வல்ல. சிறுவயதில் கல்கி, ஜெகசிற்பியன் போன்றோரின் சரித்திர நாவல்களை வாசிக்கும் போது தஞ்சாவூர், மதுரை, காஞ்சிபுரம் போன்ற நகர்களைப் போல புகழ் பெற்று விளங்கிய நல்லூர் பற்றிய சரித்திரச் சின்னங்கள் ஏன் அரிதாக காணக்கிடைக்கின்றன என்று எண்ணுவதுண்டு. மேலும் அறிவு வளர்ந்த போது இவற்றிற்கெல்லாம் காரணம் அன்னியராட்சியும் ஆண்ட பெருமையைப் பற்றி வாயளக்கின்ற அளவிக்கு அரிதாகக் காணப்படும் சின்னங்களைப் பாதுகாப்பதில் போதிய ஆர்வமற்றுக் கிடக்கும் எம்மவரின் மனநிலையும் தானென்பது புரிந்தது. எம்மவரின் ஆர்வமற்ற மனநிலைக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் கூறலாம். இந்நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் கோப்பாய்க் கோட்டை பற்றி சிறியதொரு கட்டுரையினை எழுதியிருந்தார். இன்று இன்று அந்தக் கோப்பாய்க் கோட்டையிருந்ததாக காணப்படும் நிலப்பரப்பு என்ன நிலையில் இருக்கிறது? இத்தகையதொரு சூழ்நிலையில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் கட்டடக் கலை சம்பந்தமான பட்டப்படிப்பை படித்துக் கொண்டிருந்த சமயம் மீண்டும் நல்லூர் நகர அமைப்பு பற்றி ஆராய வேண்டும் என்று நினைத்ததற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

பாரம்பரியக் கட்டடக் கலை சம்பந்தமான பாடம் ஒன்றை எமக்கு கற்பித்துக் கொண்டிருந்த நிமால் டி சில்வா என்ற சிங்களப் பேராசிரியர் 'பண்டைய அனுரதபுர நகர அமைப்பு' பற்றிய ஆய்வு சம்பந்தமாக எமக்கு கற்பித்துக் கொண்டிருந்த போது எனக்கு நல்லூர் ராஜதானியின் நகர அமைப்பை ஏராய வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டது. நண்பரும் ஒரு வருட சிரேட்ட மாணவருமான தனபாலசிங்கம் என்பவர் ஒருமுறை 'தான் நல்லூர் பற்றி ஆராய நினைத்ததாகவும் பின்னர் அது அசாத்தியமென எண்ணிக் கைவிட்டதாகவும்' குறிப்பிட்ட போது எனது நல்லூர் மீதான ஆர்வம் மேலும் அதிகமானது. சிறுவயதிலிருந்தே யாராவது முடியாது என்று கூறும் விடயங்களை முயன்று பார்ப்பது என் வழக்கமாகி விட்டிருந்தது. விளைவு 'கட்டடக்கலையின் சரித்திரம்' என்ற பாடத்திற்காக எழுத வேண்டிய ஆய்விற்காக 'நல்லூர் ராஜதானியின் நகர அமைப்பையே' தெரிவு செய்து கொண்டேன். அன்றிலிருந்து இன்றுவரை சமயம் கிடைக்கும் போதெல்லாம் நல்லூர் நகர அமைப்பு பற்றி நான் குறிப்பிடத் தயங்குவதேயில்லை. நல்லூர் நகர அமைப்பு பற்றிய கட்டுரைகள் சில யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பத்திரிகையும், ஆரம்பத்தில் என்னை எழுத்துலகில் ஊக்குவித்ததுமான 'ஈழநாட்டின்' வாரமலரில் வெளிவந்தன. 'கோப்பாய் கோட்டை' பற்றிய கட்டுரை வீரகேசரியில் வெளிவந்தது. அண்மைக்காலமாக தாயகம் இதழிலும் நல்லூர் பற்றி எழுதி வருகிறேன். நல்லூர் ராஜதானி போன்று சிங்கை நகர் (வல்லிபுரம்) கந்தரோடை போன்ற ராஜதானிகளின் நகர அமைப்பு பற்றியெல்லாம் ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும் என்பது என் அவா. வல்லிபுரம்தான் சிங்கை நகர் என்பதில் எனக்கு பூரணமான உடன்பாடு. அப்பகுதியில் மணற்றிடரில் காணப்படும் பழமையின் சின்னங்களும் வல்லிபுரம் என்பதில் வரும் புரம் என்னும் பகுதியும் என் உடன்பாட்டிற்கான முக்கிய காரணங்களில் சில. (சோழர்களின் தலைநகர்களான ஜெயங்கொண்ட சோழபுரம், உலகமாதேவி புரம், மற்றும் பல்லவர்கள் காலத்தில் புகழ் பெற்ற காஞ்சிபுரம், மாமல்லபுரம், நந்திபுரம் போன்ற புரம் என்று முடியும் பல ஊர்களை தமிழகத்தில் காணலாம்) வல்லிபுரமும் மாவிட்டபுரம் போல புரம் என்று முடிவதால் அரச, தெய்வ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக நிச்சயம் இருந்திருக்க வேண்டும். (நல்லூர் என்ற பெயரும் இத்தகையதே. தமிழகத்தில் நல்லூர் என்று முடியும் பல அரச, தெய்வ முக்கியத்துவம் வாய்ந்த ஊர்களைக் காணலாம்.)

நல்லூர் கூட சோழர்கள் விட்டுச் சென்ற எச்சம் என்பது கலாநிதி சி.க.சிற்றம்பலம் போன்றோரின் கருத்து. 'செம்பியன் பற்று, நல்லூர், மாவிட்டபுரத்திலுள்ள வளவர்கோன் பள்ளம், நவிண்டிலில் உள்ள கங்கை கொண்டான் போன்ற இடப் பெயர்கள் சோழர் இங்கு விட்டுச் சென்ற எச்சங்களாகத் திகழ்கின்றன' (சிந்தனை, ஆடி 84)

வடக்கில் மட்டுமல்ல, கிழக்கிலும் திருமலை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டிய பல இடங்கள், விடயங்கள் உள்ளன. இவை பற்றியும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்பதும் என் அவா. இந்த அவா நிறைவேறும் என்ற நம்பிக்கை நிறையவேயுண்டு.

உசாத்துணை நூல்கள்:

யாழ்ப்பாண வைபவமாலை- குலசபாநாதன் பதிப்பித்தது
யாழ்ப்பாணச் சரித்திரம்- முதலியார் செ.ராசநாயகம்
யாழ்ப்பாணச் சரித்திரம்- ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை
ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சி-கலாநிதி க.செ.நடராசா
தமிழ் மனையடி சாஸ்திரம்- பி.எஸ்.ஆச்சார்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகம் ஊரும் பேரும்- ரா.பி.சேதுப்பிள்ளை
Conquest of Ceylon- Oueroz F Vol 1&4
Tamils and Ceylon- C.S.Navaratnam
The Kingdom of Jaffna-S.Pathmanathan
Urban and Regional Planning- Rame Gowda
Urban Geography- Prof. Jeyasingam
Early Christianinty in Ceylon- Fr.Rev.Peiris, Fr.Meersman
Living Architecture: Indian - Andreas Volwahsen
Monumental Art and Architecture of India- K.Sundaram
The arts and crafts of India and Ceylon- Ananda Coomarasamy

கட்டுரைகள்:

யாழ்ப்பாண இராச்சியம்- கலாநிதி சி.க.சிற்றம்பலம் (ஈழமுரசு கனடா 25.2.94, 11.3.94)
வையாபாடல்- கலாநிதி க.செ.நடராசா (தமிழோசை கனடா 15.12.93)
யாழ்ப்பாணத்து பெரிய கோயில்-க.குணராசா (வீரகேசரி 15.8.93)
யாழ்ப்பாணம் என்ற பெயர் தோன்றியது எவ்வாறு? ம.க. அ.அந்தனிசில் (வீரகேசரி 9.12.90)
யாழ்ப்பாணம் என்ற பெயரின் காரணங்கள் பற்றிய கருத்தாய்வு- கலாநிதி க.செ.நடராசா (தமிழோசை 11. 11.93)
ஈழமும் இந்து மதமும்- பொலநறுவைக் காலம்- கலாநிதி சி.க.சிற்றம்பலம் (சிந்தனை ஆடி 84)
The kings of Jaffna during portugese period-சுவாமி ஞானப்பிரகாசர்

நில அளவைத் திணைக்கள வரைபடங்கள்

Jaffna Town Planning assessment surveys.
Sheet no:A2/45/4W, A2/45/3E

# சின்னப் பையனின் சின்னத்தனம்

ராஜ் வந்து சேர்ந்த போது முதல் பார்வையிலேயே எனக்கு அவனைப் பிடித்துப் போயிற்று.. சிறிய பையன். . அட.. நீ என் தம்பி போல இருக்கிறாய் என்றதும் அவனுக்கும் என்னைப் பிடித்துப் போனது.
றினிடாடியனுன அவன் என்னை பிரதர் என்று அழைப்பதற்கு பதிலாக அவன் பாசையிலேயே பிறெடோர் என்று அழைத்துக் கொள்வதுண்டு.

சின்னப்பையன்.. றினிடாடியர்களுக்கு கனடாவிற்கு விசா இல்லை என்றதும் வந்த அலையில் வந்து சேர்ந்த சிப்பி இவன். இருவரும் ஊர் விவகாரங்கள், சொந்த விவகாரங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது தன் பெண் சினேகிதி பற்றிச் சொன்னான்.

இவன் வாடகைக்கு இருந்த வீட்டுப் பெண் தான் அவள். மைனர் பெண். பெண்ணின் தகப்பனுக்கு இவர்களின் தொடர்பு பிடிக்கவில்லை. இதனால் அவன் வீட்டை விட்டு வேறிடத்தில் குடியிருக்கத் தொடங்கினான்.கொஞ்ச நாளில் அவளும் வீட்டை விட்டு வெளியேறி இவனோடு வந்து விட்டாள்.

தன் கதைகளை என்னிடம் சொல்லிக் கொள்ளும் போது.. நீ சின்னப் பையன்... ஒரு குடும்பத்தை கொண்டு செல்லக் கூடிய அளவு பொறுப்பு இருக்கிறதா என்று கேட்டுக் கொள்வதுண்டு... ஒரு பெரிய மனித தோரணையில்..

நான் என்ன செய்வது? அவள் துன்பத்திலிருக்கும் போது நான் கட்டாயம் பக்கத்திலிருக்க வேண்டும், விட்டு ஓடவா முடியும் என்று நியாயங்கள் சொல்வான். எனக்கு என்னவோ.. இது காதல் வேகத்தில் சொல்லும் ஒன்றாகத் தான் பட்டது. வயது அப்படி.. விலக்கப்பட்ட கனியை உண்பதில் ஆதாம் ஏவாளுக்கு மட்டும் என்ன.. இந்த சாதாரண மனிதர்களுக்கே பாவச் சோதனை தான். அதற்கான நியாயப்படுத்தல்கள் சுலபமாக வந்துவிடும்.

வாழ்க்கையின் கோரங்கள் பின்னர் புலப்படத் தொடங்கும் போது தான் 'ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்' என்று புரியும். அதன் பின்னால் 'எல்லா கஷ்டங்களுக்கும் நீதானே காரணம்' என்று மாறி மாறித் திட்டிக் கொள்வது நடக்கும். இது வழமையான ஒன்று தான். அந்த வயது அப்படி.. வேகம் அப்படித் தான் இருக்கும்.

கொஞ்ச நாளில் எப்படி அவள் என்று கேட்கும் போதெல்லாம் அவன் அதற்கான பதிலை ஆர்வத்துடன் சொல்லாத போதே கேட்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. என் எதிர்பார்ப்பு சரியாகத் தான் இருந்திருக்க வேண்டும். அவளுடைய தங்கைக்கு தலையில் கொஞ்சம் பிழை என்றான். ஏன் எதற்கு என்று நான் கேட்கவில்லை.

கொஞ்ச நாளில் அவனது இமிக்கிரேஷன் விவகாரம் விவகாரத்தில் முடிந்து ஆளுக்கு நாடு கடத்தல் கட்டளை வந்தது. இதனால் வேலையும் போய் விட்டது. ஏதோ அவன் அறிவுக்கு எட்டிய விதத்தில் மூளையைப் பாவித்தான். புதிதாக திருமண வீட்டுக்கு செல்வது போல உடுத்துக் கொண்டு அமெரிக்க எல்லையில் போய் தான் அமெரிக்காவிற்கு திருமணம் ஒன்றிற்கு போவதாக கதை விட்டான். உஷாராகினர் அமெரிக்கர். ஆள் அடுத்த விமானத்தில் றினிடாட்டிற்கு நாடு கடத்தப்பட்டார். பேசாமல் தலைமறைவாய் மற்றவர்கள் போல இருந்திருக்கலாம். அமெரிக்கர்கள் கனடியர்களிடம் ஒப்படைக்க.. சுவரில் எறிந்த பந்து போல றினிடாட்டில் போய் விழுந்தான்.

பின்னாளில் அவனைப் பற்றி விசாரித்த போது மற்றவர்கள் சொன்ன தகவல் அதிர்ச்சி தந்தது. இவன் அங்கே ஒரு சிறுவனைப் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கி துஷ்பிரயோகம் செய்ததில் இப்போது சிறையில் இருக்கிறானும்.. அட கடவுளே.. சின்னப் பையன், என் தம்பி மாதிரி இருக்கிறாய் என்று சொன்ன அவனா?

**உறவுகள் விடுகதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேக்கர், ரோமர்களுடன் வர்த்தகம்

கன்னியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வியண்மாண் நன்கலம்
பொன்னெடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி யார்ப்பென... என்கிறது அகநானூறு 148. மிளகு கொடுத்து பொன்வாங்கும் முசிறி என்பது இதன் பொருள்.

கலந் தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரை சேர்க்குந்து
மலைத்தாரமும் கடற்தாரமும்
தலைப் பெய்து மருநர்க்கீயும்
புனலங்கள்ளின் பொலந்தாரிக் குட்டுவன்
முழங்கு கடல் முழவின் முசிரியன்ன என்கிறது புறநானூறு 343.

கௌடியல்யர் வடநாட்டு வாணிபத்தை விட தென்னாட்டு வாணிபமே சிறந்தது என்றும் வடநாட்டு கம்பளி, தோல், குதிரைகள் என வாணிகம் நடந்த தென்னாடோ பொன் வைரம் முத்து சங்கு போன்ற விலையுயர்ந்த பொருட்களில் வாணிபம் என்கிறார் மு.வ மொழிவரலாறு என்ற நூலில்.

பிந்துசார மன்னனுக்கு ஒரு அறிவாளியை அனுப்ப மறுத்த கிரேக்க அரசு தென்னாட்டுக்கு பாதுகாப்பாளராகவும் பொறியியிலாளராகவும் பலரை அனுப்பியுள்ளது. இதற்கு செல்வநிலையே காரணமாக இருக்கலாம்.

சீசர்களுக்கும் இந்திய மன்னர்களின் தூதுவர்கள் பலர் இருந்தனர். இதில் பாண்டிய மன்னன் அனுப்பிய தூதரை அகஸ்தஸ் ஏதன்சில் வைத்து கி.மு. 20இல் சந்தித்தான்.

இந்தியா தன் ஏற்றுமதிக்கு பதிலாக தங்கத்தையே வாங்கியது. வைன் போன்றவற்றிற்கு மவுசு இருந்தாலும் தகரம், ஈயம், அடிமைப் பெண்கள் போன்றவர்களும் கொண்டு வரப்பட்டனர். ஆனால் இந்த ஏற்றுமதியால் மேற்கு நாட்டுக்கு பாதகமான சூழ்நிலையே நிலவியது. இதனால் ரோம சாம்ராஜ்யத்திலிருந்து பெருமளவு தங்கம் இந்தியாவுக்கு சென்றது. நீரோவின் காலத்திலிருந்து ரோம சாம்ராஜ்யம் பொருளாதார நெருக்கடிக்குள்ளாக இந்த தங்க வெளியேற்றமே காரணமானது. பெருமளவு ரோம நாணயங்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் காணப்பட்டதால் அங்கு வழமையான பணமாக இந்த நாணயம் புழக்கத்திலிருந்திருக்கலாம்.

காயஸ் கிளாடியஸ் என்ற மன்னனின் மனைவி மூன்று லட்சம் பவுண் மதிப்புள்ள முத்து அணிந்திருந்தாளாம். முத்துக்களுக்காகவும் மணிகளுக்காகவும் இருபது லட்சம் பெறும் ரோமநாட்டுச செல்வம் பெறும் ரோமநாட்டுச் செல்வம் ஆண்டு தோறும் தமிழ் நாட்டுக்கு சென்று விடுகிறது என்று பிளினி எனும் ரோம வரலாற்ருசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஒவ்வொரு வருடமும் 55 கோடி செஸ்திரஸ் இந்தியாவுக்கு சென்றிருக்கிறது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுவன பெரும்பாலும் ஆடம்பரப் பொருட்களாகவே இருந்தன. வாசனைச் சரக்குகள், நகைகள், துணிகள், கிளிகள், குரங்குகள், மயில்கள் போன்ற மிருகங்களே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ரோமன் பொருளாதாரப் பாதிப்பு தென்னிந்தியாவில் காணப்பட்ட போதும் வட இந்தியாவில் ரோம-கிரேக்க கருத்துக்களும் பொருட்களும் காணப்பட்டிருக்கின்றன.

முத்து கிட்டத்தட்ட அதன் நிறையின் மூன்று மடங்கு நிறையுள்ள உயர்தர பொன்னிற்குச் சமமாக மதிப்பிடப்பட்டது.

ரோமநாட்டுக் குறிப்புகளின்படி இரண்டாயிரம் ரோமர் அடங்கிய படை ஒன்று முசிறியில் இருந்ததாக அறியப்படுகிறது.

கி.மு 962-930 இல் சாலமன் என்னும் இஸ்ரேலிய மன்னன் தமிழ்நாட்டிலிருந்து பொன், வெள்ளி தந்தம் குரங்கு மயில் அகில் முதலியவற்றை பெற்றதாக வரலாறு கூறுகின்றது.

கி.மு 727-722 இல் அசிரிய நாட்டு மன்னனுகிய ஷால் மனேச்சருக்கு தமிழ்நாட்டிலிருந்து டியானே நன்கொடையாக வழங்கப்பட்டது. கி.மு 6ம் நூற்றுண்டில் பபிலோனியாவிற்கு அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டுக்கும் உரோமாபுரிக்கும் இடையே நிகழ்ந்த கடல் வணிகத் தொடர்புகளான அரிக்கமேடு, வெள்ளையன் இருப்பு, அழகன் குளம் முதலிய இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகள் தடயங்களுடன் எடுத்துரைத்திருக்கின்றன.

இந்த பொன் அதிகளவில் இருந்ததாலோ என்னவோ மன்னர்கள் புலவர்களுக்கு பரிசில் வழங்கும் போது பொன் பரிசில் வழங்கியிருக்கிருர்கள்.

குடக்கோ இருஞ்சேறல் இரும்பொறை பொருங்குன்றூர் கிழாருக்கு 32 ஆயிரம் பொற்காசுகள் வழங்கினர். சோழன் கரிகாற் பெருவளத்தான் உருத்திரங் கண்ணனருக்கு பதினறு நூருயிரம் பொன் பரிசில் வழங்கினன்.

சேரமான் கடுங்கோவாழி கபிலருக்கு நூருயிரம் பொன் வழங்கினன். நெடுமான் தகடு செறிந்த பெருஞ்சேரலிரும்பொறை அரிசில் கிழாருக்கு ஒன்பது நூருயிரம் காணம் வழங்கினன். ஆடு கோட் சேரலாதன் காக்கை பாடினியாருக்கு நகைக்கு ஒன்பது துலாம் பொன்னும் நூருயிரம் பொற்காசும் வழங்கினன்.

வானவரம்பன் காப்பியாற்றுக் காப்பியனருக்கு நாற்பது நூருயிரம் பொன் பரிசு வழங்கினன்.

**க.நீலாம்பிகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி 8 ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில்

# வாக்களிப்பதற்கு


### உங்கள் பெயர்

## புதிய வாக்காளர் பட்டியலில்

### அல்லது

## வாக்களிக்கும் உறுதிப் பத்திரத்தில்

புள்ளி விபரம் சேகரிப்பவர்களிடமிருந்து பாரம் 301 கிடைக்கப் பெறாவிடின் உங்கள் பெயர் புதிய வாக்காளர் பட்டியலில் இல்லை. காத்திருக்காது இப்பொழுதே அழையுங்கள்! ஆனி 7ம் திகதிக்கு முன் வாக்காளர் உறுதிப்பத்திரம் பெறுவது உங்களைப் பொறுத்தது.




## இப்பொழுதே அழையுங்கள்

### வாக்களிக்கும் உறுதிப் பத்திரம் எப்படிப் பெறுவது என்ற விபரம் அறிவதற்கு.

### ஆனி 8 நீங்கள் வாக்களிக்க முடியுமா?

வாக்களிப்பதற்கு, நீங்கள்...

- தேர்தல் நாளில் 18 அல்லது மேலான வயதுடையவர்
- வாக்களிக்கும் நேரத்தில் கனேடிய பிரஜை, அத்துடன்
- கடந்த 6 மாத காலத்தில் ஒன்ராறியோவில் வசித்தவர்

உங்கள் பெயர் புதிய வாக்காளர் பட்டியலில் அல்லது நீங்கள் வசிக்கும் தேர்தல் மாவட்ட வாக்காளர் உறுதிச் சீட்டில் இருந்தால் வாக்களிக்கத் தகுதியுண்டு.

தேர்தல் அதிகாரிகளின் தொலைபேசி எண்கள் தொலைபேசி இயக்குனரின் உதவியுடன் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் தேர்தல் மாவட்டத்தையிட்டு தகவல் தேவையாயின் "தேர்தல்கள் ஒன்ராறியோ" என சொல்லி பின் தேர்தல் மாவட்ட பெயரை சொல்லவும்

கிராமியப்பகுதிகளில் நீங்கள் வாக்களிக்கத் தகுதியுடையவராயின், உறுதி படுத்தப்படுவீர், இருந்தும் வாக்களிக்கும் உறுதிப் பத்திரத்தைப் பெற விரும்பினால் தகவல் பெறும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்.

வாசிக்கத் தெரியாத நண்பர்களோ உறவினரோ உங்களுக்கிருப்பின், இப் பிரசுரத்திலுள்ள தகவலை அவர்களுக்கு அறியத்தரவும்.

ஒன்ராறியோவின் பிரதான தேர்தல் அதிகாரியின் காரியாலயத்தினால் பிரசுரிக்கப்பட்டது.
வாறன். ஆர். பெய்லி பிரதான தேர்தல் அதிகாரி

தேர்தல் பற்றிய பொது விபர அழைப்பு,
ரொறன்ரோவும் அதைச் சார்ந்த
பகுதிகட்கும்
(416) 754-8683
ரொறன்ரோவிற்கு வெளியில்
1-800-668-2727

**Elections Ontario**

சட்ட நிருபண சபையின் சார்பற்ற ஸ்தாபனம்
**உங்களுக்கு தகவல் வழங்குகின்றோம்**

R/36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் பறந்து phone ஆனே, என்னை மறந்து phone ஆனே,

நீங்கள் குமரிமுத்துவை இங்கே அடிக்கடி கண்டிருக்கக்கூடும். திருட்டுமுழி.. பஞ்சத்தில் அடிபட்ட பரதேசி போன்ற தோற்றம். தன்னுடைய ஃபேஸ் கட்டை சரியாக அறிந்து கொள்ளாமல் 'எனக்கு என்ன குறை ஐசே' என்று கொண்டிருப்பான். இவருக்கு ஒரு கெட்ட பழக்கம் உண்டு.. போன் பண்ணுவது! போன் பண்ணுவது என்னப்பா கெட்ட பழக்கம் என்கிறீர்களா? ஊருக்கு போன் பண்ணி காசை கரியாக்குகிருன் குமரிமுத்து என்று நினைப்பீர்களாயின் உங்கள் தலையில் மண் விழ.. ஆள் வலு சுழியன் கண்டியளோ.. அங்கங்கே சமறிக்கு இருக்கும் இடங்களில் போன் அடித்து விட்டு காசைக்கொடுக்காமல் சமறியை மாறுவது தான் அவன் செய்யும் வேலை..

அப்ப என்ன கெட்ட பழக்கம்? பெண்களுக்கு போன் பண்ணுவது.. அதென்ன தெரிஞ்ச பெண்களுக்கு போன் பண்ணினுல் என்னவாம் என்பீர்களே.. அவன் போன் பண்ணுவது தெரியாத பெண்களுக்கு..! அதிலும் திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு போன் பண்ணி டேற்றிங் போக அப்பொய்ன்மென்ட் வைத்தாலும் பரவாயில்லை. தன் முகவெட்டுக்கு அது சரிப்பட்டு வராது என்ருே அல்லது எதற்கு வீணுக செருப்படி வாங்குவது என்ருே அவன் திருமணமான பெண்களுக்கு மட்டுமே போன் பண்ணுவான்.

ஊரில் உள்ள கணவன்மார்கள் எல்லாம் இரண்டு வேலை, மூன்று வேலை செய்வதால் அவர்களால் தங்கள் மனைவிமாரைக் கவனிக்க முடிவதில்லை, எனவே கனடாவில் உள்ள திருமணமான பெண்கள் திருட்டுத்தனமாக யாரையாவது பிடிக்க நினைப்பார்கள், இந்த இடத்தில் தான் புகுந்து விளையாடலாம் என்பது தான் குமரிமுத்துவின் கணிப்பு. அட நாசமறுப்பானே.. அதுக்கு கொஞ்சம் இங்கிதமாக பேச வேண்டாம்.. இரவுகளில் எடுத்து ஆபாசமான முக்கல் முனகல்கள் செய்வது தான் இவன் தொழில்.. இவனது முனகல்கள் எல்லாம் தாங்கள் ஒரு கண் வைத்திருந்த இளசுகளின் வேலை என்று நினைத்து அந்தப் பெண்கள் எல்லாம் அந்த இளசுகளோடு அயிட்டம் போட்டுச் செல்ல.. அணில் ஏற விட்ட நாய் மாதிரிப் பார்ப்பது தான் குமரிமுத்துவின் வேலை.

அதிலும் யாராவது பெண்கள் ஏடாகூடமாகப் பேசினுல் தொலைந்தது.. அப்புறமாய் படுதூசணத்தில் திட்டத் தொடங்கி விடுவான். முன்னைய மாதிரி இல்லாமல் இப்போது போன் நம்பர்கள் தெரிவதில் அறுவான் குளிர் வெயில், சாமம் பகல் என்று பாராமல் போன் பூத்துகளில் இருந்து தொலைபேசிக் கொண்டேயிருப்பான். போதாக்குறைக்கு தன்னேடு றெஸ்ரோறன்ரில் வேலை செய்யும் தம்பிமுத்துவிடமும் போன் நம்பரைக் கொடுத்து 'நீயும் அடிச்சுப் பேசு மச்சான்' என்றதும்.. வெள்ளி பார்த்த தம்பிமுத்து தானும் கடமை முடிந்து வரும் போது போன் அடித்துப் பேசிக் கொள்வான்.

இப்படியாக தன் தொலைபேசிப் போராட்டத்தை குமரிமுத்து முன்னெடுத்த வேளை.. அவனுக்கு காலாகாலத்தில் ஒரு பெண்ணைக் கட்டி அனுப்பினுர்கள். பெட்டை அங்கே ஊரில் வேலை வெட்டியில்லாமல் இருந்த பெடியனேடு காதலாகி கசிந்து கண்ணீர் மல்க.. அவள் ஓடிப் போகப் போகிருள் என்று அறிந்தவர்கள் கனடா மாப்பிள்ளைக்கு எக்ஸ்போட் பண்ணி விட்டார்கள். பிறகென்ன.. புதுமாப்பிள்ளை.. போன் அடிக்க எங்கே நேரம்?

தேனிலவு முடிந்து குமரிமுத்து வேலைக்குப் போக தொடங்கினுன். தம்பிமுத்துவுக்கு இப்போது குமரிமுத்துவின் நோய் பற்றிக் கொண்டது. ஆனுல் அவன் அதில் எக்ஸ்பேட் ஆகத் தொடங்கி விட்டான். குமரிமுத்து மாதிரி தூசணம் பேசி விசயத்தைக் குழப்பாமல் விசயத்துக்கு வரும் ரகசியத்தை அவன் கற்றுக் கொண்டு விட்டான்.

குமரிமுத்து இரண்டு வேலை செய்யத் தொடங்கியதும்.. குமரிமுத்து மாதிரியே.. ஒகோ.. இவன் இரண்டு வேலை செய்வதால் மனைவியைக் கவனிக்க இவனுக்கு நேரமிராது.. என்று லொஜிக் போட்டு போனைச் சுழட்டினுன். அவவும் சுழண்டு விட்டா.

வேலை முடிந்து வந்த குமரிமுத்து வீட்டே வந்து பார்த்தால் ஆளைக் காணேம். அவவை எல்லா இடமும் தேடிப் பார்த்தான். போதாக்குறைக்கு வெளியேயும் எட்டிப் பார்த்தான்.. விழுந்து கிழுந்து தற்கொலை செய்திருப்பாவோ என்று.

உள்ளே பார்த்தால் போனுக்கு கீழே ஒரு துண்டு. . மிஸ்டர் குமரிமுத்து.. ஒரு பெண்ணை வாழ வைக்கத் தெரியாத உம்மோடு வாழ நான் தயாராக இல்லை. நான் கண்ணுளன் தம்பிமுத்துவுடன் புதிய வாழ்வு தேடிப் போகிறேன் என்று எங்கோ படத்தில் கேட்ட வசனங்களை எழுதி விட்டு மாறி விட்டிருந்தா. இப்போது குமரிமுத்து அவள் பறந்து phone ஆனே, என்னை மறந்து phone ஆனே, நான் பார்க்கும் போது கண்களிரண்டைக் கவர்ந்து phone ஆனே என்று பாடிக் கொண்டிருக்கிருர். இந்தக் கதை சொல்லும் நீதி என்னவெனில் தன் வினை தன்னைச் சுடும்.

**பென் கூரியன் குட்டிக்கதைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ லோகத்துக்கு சென்றுவர ஒரு முயற்சி

தொரந்தையூர் மனிதஸ்ரீ,
விஞ்ஞானாச்சாரியார்

தேவலோகம். தெருவிலே ஐராவதத்திலே அமர்ந்து இந்திரன் சென்றுகொண்டிருக்கிறான். புடைசூழ தேவர்கள். அழகே உருவான தேவ மாதுக்கள். பளிங்கு மாளிகைகள். துன்பம் என்பதை உணர விரும்பாத அதிசயப்பிறவிகள். முனிவர்கள் தேவர்களைத் தரிசிக்கவும் கடவுள் அம்சங்களைத் தரிசிக்கவும் அப்பாதையால் நடந்து சென்று கொண்டிருக்கின்றனர். தேவலோகம் என்று சொன்னவுடன் இவைதான் எம் நினைவுக்கு வருகின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் முன் எழுதப்பட்டதாகக் கூறப்படும் புராணங்கள் இதிகாசங்கள் எல்லாம் தேவலோகம் பற்றிச் சொல்லியே இருக்கின்றன. மனிதர்கள் பற்றி எவ்வளவு எழுதி வைத்தார்களோ தேவர்கள் பற்றியும் எழுதி வைத்திருக்கிறார்கள் எம் முன்னோர். ஆம் அந்தத் தேவலோகம் எங்கே! இவர்கள் எல்லாம் இன்று எங்கே ஒழித்துவிட்டார்கள்?

பகுத்தறிவாளர்கள் இதற்குச் சொல்லும் பதில் ஒன்றுதான். இவைகள் எல்லாம் கற்பனைப் பாத்திரங்கள். கதைகளுக்கு அழகு சேர்க்க உருவாக்கப்பட்டவை. தேவர்களும் இல்லை. தேவலோகமும் இல்லை. இந்தக் கருத்தை பகுத்தறிவுவாதிகள் வலியுறுத்தியபோதும் மேலெழுந்தவாரியான தர்க்கத்தில் அமைந்த கருத்துக்களாகவே பகுத்தறிவுவாதிகளின் மறுப்புக் காணப்படுகின்றது. முன்னொருகாலத்தில் அவ்வாறு தேவாம்சம் பொருந்திய இனம் (அல்லது உயிரினம்) இருந்திருப்பதற்கான சாத்தியம் பற்றியோ, என்று கருதக்கூடிய இடம், சூழல், தளம் அல்லது பூமியின் வெளியில் உள்ள கிரகம் இருந்திருக்கக்கூடியசாத்தியங்கள் பற்றியோ இவர்கள் கருத்தில் எடுக்கவில்லை.

விஞ்ஞான நோக்கில் பார்ப்பினும் தேவலோகம்-தேவர்கள் என்பதெல்லாம் இருந்தமைக்கான வெளிப்படையான சான்றுகள் காணப்படவில்லை. இந்தக் கதைகள் எல்லாம் அன்றைய காலத்தைய 'கற்பனைகள்' என்றே முத்திரை குத்தப்படும்.

ஆனால் இந்துக்கள் மத்தியில் அன்று முதல் இன்று வரை 'தேவர்கள்-தேவலோகம்' என்பது நம்பப்பட்டு வருகின்றது. சில தேவாம்சங்கள் தெய்வநிலையில் வணங்கப்படுகின்றன. அவ்வாறாயின் இந்துக்கள் கற்பனைத்தனமான நம்பிக்கை கொண்டவர்களா என்ற கேள்வி எழுகின்றது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலைத்து நிற்பதாகக் கூறப்படுவது இந்து மதம். ஒவ்வொரு இந்து தத்துவங்களுக்கும் தர்ம நியாயங்களைத் தந்திருப்பதுவும் இந்துமதம். யோக சக்தி, ஞான சக்தி கொண்டவர்களும், சித்தி பெற்றவர்களும் முனிவர்களும் காலாகாலமாக வளர்த்துவருவது இந்துமதம். இவ்வாறான சிறப்புகள் பெற இந்துமதம் கற்பனைத்தனமான விஷயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்று கூறுவது சற்றுச் சிக்கலான விஷயம். இதை இந்துக்கள் ஏற்கப் போவதில்லை. இந்துக்கள் மத்தியில் 'தேவர்க-தேவலோகம்' பற்றிய விஷயங்களுக்கு ஆதரவாகத் தெரிவிக்கப்படும் நியாயங்களைப் பார்ப்போம்

ஏன் தேவலோகமும் வேறொரு கிரகமாய் இருக்கமுடியாது?

1976ம் ஆண்டு 186 விஞ்ஞானிகள் சேர்ந்து சோதிடத்துக்கும் அதுசார்ந்த தத்துவங்களுக்கு முழுமையான மறுப்பொன்றை அறிக்கையாக வெளியிட்டு இருந்தனர். இவ்விஞ்ஞானிகளில் 18 பேர் நோபல் பரிசு பெற்றவர்கள். அம் மறுப்பில் பல விஷயங்கள் அடங்கியிருப்பினும் முக்கியமானதொன்று இது கிரகங்களின் தாக்கங்கள் பற்றிக் குறிப்பிடப்படும் சோதிடத்தில் பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிளேட்டோ, யூரேனஸ் பற்றிக் குறிப்பிடாமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்குப் பதில் அளித்த மேலைத்தேச சோதிட ஆய்வாளர்களுக்கு கைகொடுத்தது இந்துமதந்தான். சில இந்துமத ஆதிகால சுவடிகளிலும், இந்து சோதிடத்தின் சில நூல்களிலும் 12 நிஜக் கிரகங்கள்(சாயாக் கிரகங்களா- ராகு. கேது தவிர்த்து) உண்டு என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது விஞ்ஞானத்தில் கண்டுபிடிக்கப்பட இன்னும் இரு கிரகங்கள் பற்றி ஏற்கெனவே இந்து மதத்தில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது. சில வானசாஸ்திர ஆய்வாளர்கள் வேறொரு கிரகம் இருக்கக்கூடிய சாத்தியக்கூறு பற்றி தெரிவித்துள்ளன அக்கிரகம் அநேக ஆண்டுகளுக்கொரு முறை பூமிக்கு அண்மையில் வருகின்றது என்று கூறியிருப்பதுடன் அக்கிரகத்தில் உயிரினம் இருக்கக்கூடிய சாத்தியம் பற்றியும் தெரிவித்துள்ளனர். எது எப்படி இருப்பினும் இதுவரை எமது கணிதத்துக்கு உட்படாத சுழல்பாதை உள்ள கிரகம் இருப்பதற்கும் இதில் மனிதர்களிலும கூடிய அறிவுள்ள உயிரினங்கள் இருப்பதற்கும் உள்ள சாத்தியங்களை நாம் மறுக்க முடியாது. எமது வாழ்நாளாகிய சில பத்து ஆண்டுகளுக்குள் புலப்படாத ஒரு காரணத்தால் ஒரு கருத்தைப் பொய்யென்று கூறுதல் முடியாது. எனவே தேவலோகம் என்பது இன்னொரு கிரகமாக இருக்கலாம் என்று கருதுவதில் மறுப்புத் தெரிவிக்க இயலாது. தேவலோகம் பூமியில்தான் உள்ளது என்பர் சிலர்

தேவர்கள் சாதாரண மனிதரின் கண்ணுக்குப் புலப்படாத தன்மையில் வாழக்கூடியவர்கள் என்றும் அவாகள் பூவுலகத்தில்தான் வாழ்ந்தார்கள் - வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் சிலர் வாதிடுகிறார்கள். மனிதர் வாழுவதற்கு கஷ்டமான வட தென் துருவங்களில் வாழலாம் என்றும் இமயமலை உச்சியில் குடி கொண்டிருக்கலாம் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடங்களில் தென்பட்ட தோன்றி மறையும் 'பனிமனிதர்கள்' பற்றிய மர்மம் இதற்கு மேலும் சான்று பகர்வதாகவே இருக்கின்றது. தேவர்களின கதைகளில் சில இடங்களில், வருடத்தில் தொடர்சியாக பகல் பாதி– இரவு பாதி என்று சில கதைகளில் வரும் கருத்துக்களும் இதற்கு ஒரு சான்றாகவே உள்ளது. அதுமட்டும் அல்லாமல் தேவர்களைத் தரிசிக்க வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்ததாகவே அதிகமான வரலாறுகளில் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான வாதங்களையும் மறுக்கமுடியாது. ஏனெனில் எமது புலன்களுக்கு அப்பாற்பட்ட பல உண்மைகள் உண்டு என்பது விஞ்ஞானிகளாலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதே. எமது அறிவிலும் குறைந்த உயிரினங்கள் இருப்பதுபோல எமது அறிவிலும் அதிகம் உள்ள உயிரினங்களும் சாத்தியமான அவ்வாறான உயிரினம் பிற கிரகத்தில்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. பூமியிலேயே இருப்பத அதிசயமும் இல்லை.

தேவர்கள் அவ்வப்போது மனிதர் நடமாடும் இடங்களுக்கு வந்திருப்பதைப் பல கதைகளிலும் காண புராணக்கதைகளில் உள்ள சம்பவங்கள் போன்று கிறிஸ்துக்குப் பின் உள்ள ஆண்டுகளில் நிகழ்ந்த வரலாறுகளிலும் தேவர்கள் பற்றிய விஷயம் வருகின்றது. சில இலக்கிய ஆசிரியர்கள் கதைகளுக்கு மெருகூட்ட இவ்வாறான சம்பவங்களை இணைத்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

கடந்த சில நூறு ஆண்டுகளில் அவ்வாறு தேவர்களின் பிரத்தியட்ச நிகழ்வுகள் எதுவும் இல்லை. ஒரே காரணத்துக்காக 'தேவர்கள்–தேவஉலகம்' என்பதன் நம்பகத்தன்மையில் சந்தேகம் கொள்ளலாம் என்று நான் கேட்க, 'இப்படியே ஒவ்வொன்றுக்கும் நியாயம் கற்பித்தால் மூட நம்பிக்கைள்தான் உலகை அரசாளும்' என்று பகுத்தறிவுவாதிகள் கேட்பதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

# எழுத்தாளர்களுக்கு நெருப்புச் சோதனை

# கலாநிதி. திருமதி நிர்மலா சுரேஷ் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு தூண்டிய சில சிந்தனைகள்

எழுத்தாளர் இணையம் சிலவாரங்களுக்கு முன்னர் இலக்கியச்சொற்பொழிவு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. கம்பராமாயணம் பற்றிய சில கருத்துக்களை, தற்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு சுவைபடத் தந்தார் திருமதி நிர்மலா சுரேஷ். இச் சொற்பொழிவைச் செவிமடுக்க வந்த அவையோா சொற்பமாக இருப்பினும், பேசப்பட்ட கருத்துக்களை மிக உன்னிப்பாகவும் விருப்போடும் பெறவிரும்புபவர்களாகவே அவர்கள் காணப்பட்டனர். கனடாவில் இலக்கியம் பற்றி எழுதுபவர்களும் பேசுபவர்களும் அருகிக் கொண்டு போகும் இச்சமயம் இதுபோன்ற சொற்பொழிவுகளை ஏற்பாடுசெய்த இணையம் உருப்படியான காரியம் ஒன்றை முதன்முதலாகச் செய்திருக்கிறது. தனது தலைமை உரையில் இணையத் தலைவர் திரு.சண்முகராஜா அவர்கள், 'சொலலக்கூடிய அளவில் இணையம் எதனையும் இதுவரை செய்திராவிடினும், இதுபோன்ற சொற்பொழிவுகளை இனி ஏற்பாடு செய்யும்' எனக் கூறியது நம்பிக்கையைத் தருவதாக உள்ளது. திருமதி.நிர்மலா சுரேஷ் அவர்கள் 'கம்பனின் நெருப்புச் சோதனை என்ற தலைப்பில் உரையாற்றினார்.

பேசப்பட்ட கருத்துகளில் எழுந்த சில சிந்தனைகளை இங்கு தருகிறேன். இராமயணத்தின் மூலகர்த்தா மட்டும் அல்லாமல் இராமாயண காலத்தில் வாழ்ந்தவர் எனக் கூறப்படுபவர் வால்மீகி. அவருடைய இராமாயணத்தில் இருந்து வந்தவையே மற்ற இராமாயணங்கள். எனவே உண்மைச் சம்பவங்களாக இருப்பின் வால்மீகியின் கதையையே சரியானதாகக் கொள்ளவேண்டும். வழிவழி வந்த கதைகளில் இருந்து மற்ற இராமாயணங்கள் வந்திருக்கலாம் என வாதிடமுடியும் எனினும் எழுத்துருவத்தில் – சம்பவ காலத்தில் இருந்தவரால் எழுதப்பட்ட, வால்மீகி இராமாயணமே உண்மைக் கருத்தைச் சொல்வதாக கொள்ளவேண்டும். வால்மீகிகூட இராமர் காலத்தவர் அல்ல என்றும் அவரும் பிற்காலத்தவரே என கூறும் அபிப்பிராயங்கள் இருந்தபோதும் அது ஏற்றுக்கொள்ளும் அளவில் வளரவில்லை. தமிழர் எழுதியமையால் அதுதான் உண்மைச்சொல்வது என்றோ அல்லது சிறந்தது என்றோ கூறுவது குறுகிய மனப்பான்மையாகும். பொதுவாக அரசியல் இலாபத்துக்காக தமிழ்நாட்டு அரசியல் இலக்கியவாதிகள் உருவாக்கிய இந்த மனப்பான்மை ஈழத்தில் ஆரம்ப காலத்தில் ஓரிரு 'கடும்போக்கு இலக்கியவாதிகளை பீடித்தாலும் அதிஷ்டவசமாக சொல்லக்கூடியஅளவில் பரவவில்லை.

திருமதி நிர்மலா சுரேஷ் அவர்கள் பேச்சினை உற்று அவதானித்தால் தமிழமொழி பற்று கொண்டவராகவே அவரின் சொற்பொழிவு அமைந்திருந்தது. கேள்வி நேரத்தின் போதுகூட பதில் ஒன்றில் வடமொழி இராமாயணத்தைப் படியாதீர்கள் : தமிழை மட்டும் படியுங்கள் என்று கூறியதை நகைச்சுவை எடுத்துக் கொள்ள முடியவில்லை. இராமாயணம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரபுருஷர் எனக் கருதப்படும் தலைவனைப் பற்றியது ஆகையால் இலக்கிய நயத்துக்காகவோ அல்லது கற்பவர் புரிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கிலோ அல்லது அந்தஅந்தத் தேசத்து வழமைக்கு ஏற்றபடியோ வரலாறுகளைத் திரித்து இலக்கிய படைப்பது, முறையென்று கூறமுடியுமா? குலோத்துங்க சோழனின் மேல் தனக்குள்ள வெறுப்பைக் காட்டவும தன்னோடு இசைந்த சடையப்பவள்ளலின் பரம்பரைக்கு ஒரு 'விலாசத்தைக் கொடுக்கவும் இடையிடையே மாற்றியும் புகுத்தியதும் அல்லாமல் சில சம்பவங்களையே மாற்றிவிட்டான் கம்பன் என்று கூறும் சொற்பொழிவாளர், அது சரியென்று கருதுகிறாரா? வரலாறுகளைத் திரிப்பதற்கும் தமது சகபாடிகளின் இலக்கியங்களை துர்ப்பிரயோகம் செய்வதற்கும் இன்றைய பல இலக்கியவாதிகளுக்கு கற்றுக் கொடுத்தது கம்பனோ என்று கருத வேண்டியிருக்கிறது!

இலக்கியங்களைப் படைப்பதற்காக தமது உயிரையும் பணயம் வைத்து எழுதிக் கொண்டிருக்கும் மேலைத் தேச எழுத்தாளர் பற்றி சொற்பொழிவாளர் குறிப்பிட்டார். 'சொல்மன் ரஸ்டி' (பல தடைசெய்யப்பட்ட இலக்கியங்களை உருவாக்கியவர்) போன்ற எழுத்தாளர்கள் கருத்துக்களைச் சொல்ல பயன்படுத்திய உத்திகளை மிக நயமாக எடுத்துரைத்தார். உண்மைக்காகவும் குறிக்கோளுக்காவும் எழுதும் எழுத்தாளர்கள் வறுமையில் வாடியும், பலரால் வெறுக்கப்பட்டும், விலத்தப்பட்டவர்களுமாகவுமே இருப்பது அன்றுமுதல் இன்று வரை உள்ள சரித்திரங்கள் பகர்வதை உணரக்கூடியதாக இருந்தது. தற்காலத்தில் இவ்வாறான சிக்கல்களில் தம்மை பிணைத்துக் கொள்ள விரும்பாமையால் சில எழுத்தாளர்கள் உண்மையை வெறுக்கத் தொடங்கினர். வேறு சிலர் உயர்மட்டத்தில் யார் இருப்பினும் அவர்களைத் துதிபாடுதல் செய்தனர். வெறுசிலர் சந்தர்ப்பத்தை சாதகமாக்கி விற்பதற்காக மட்டும் இலக்கியம் படைத்தனர்.

இலக்கியங்கள் வெறும் ஆலாபனைகளாய் மட்டுமே இருப்பதற்கும் மனத்திலே உள்ளுருவ மறுப்பதற்கும் இந்த சூழ்நிலையே காரணமாய் இருக்கலாம்.

ஆங்கில இலக்கியங்களை எமது இலக்கியங்களுடன் சம்பந்தப்படுத்தியபோது பேச்சாளர் 'ஆங்கிலத்தில் தமது இலக்கியத்தில் கொண்ட சில விஷயங்கள்' எமது இலக்கியத்தில் இருந்தமை கண்டு தாம் வியப்பது பற்றிக் குறிப்பிட்டு தமிழின் சிறப்பை விளக்கினார். இக்கருத்தை பேச்சாளர் தந்த போது கூட்டத்துக்கு வேறுவிதமான அபிப்பிராயத்தை உருவாக்கலாம் என்பதை பேச்சாளர் கருத்தில் கொள்ளவில்லை. அதாவது, 'மேலைத் தேசத்தவரின் 'இலக்கியத்திறன்' அங்கீகாரம்தான் எமது இலக்கியங்களை மேண்மைப் படுத்துகின்றன' என்ற கருத்து அங்கே எட்டிப் பார்க்க முனைகிறது.

அவ்வாறான அடிமை மனப்பான்மை பல எழுத்தாளர்களுக்கும் இன்று உருவாகி வருகின்றது. இதற்கு முக்கிய காரணம் இலக்கியத்தில் அதிஉயர் கல்வி பெறுபவர்களில் அநேகர் (முதுமாணியும் அதற்கு மேற்பட் தமிழ் இலக்கிய ஆய்வை ஆங்கில இலக்கிய கோணத்தில் செய்ய ஆரம்பித்தமையே. பண்டிதமணி அவர்களிடம் இது பற்றி முன்னர் கேட்டபோது 'தமிழைத் தமிழாய்த்தான் பார்க்க வேண்டும்' என கூறினார். எழுத்தாளர்களுக்கு எம்மொழியும் விரோதிகள் அல்ல. கருத்துக்களும் இலக்கியத்திறனும் எங்கிருப்பினும் பாராட்டும் மனப்பான்மை வேண்டும். ஆனால் ஒப்பிடும் போது 'அக்கரை பச்சை' அறியாமை அகலவேண்டும்.

'கம்பராமாயணம் பற்றியதாகையால் 'இப்படி'ச் சொன்னேன். ஆனால் இக்கூட்டம் வேறு இலக்கியம் பற்றியதாக இருந்தால் வேறு சொல்லியிருப்பேன்' என்று பேச்சாளர் இன்னுமொரு கட்டத்தில் சொன்னார். இதுகூட தப்பான அபிப்பிராயத்தை அவையினருக்கு ஏற்படுத்தக்கூடியது. இது பேச்சுவன்மையின் சிறப்பாக இருக்கலாம் ஆனால் தாம் கொண்ட அடிப்படைக் கருத்துகளை இடத்துக்கிடம் காரணமின்றி மாற்றுவதை தீர்க்கமா சிந்தனை உள்ள இலக்கியவாதிகள் ஏற்றுக்கொள்வதில்லை. இவ்வாறான தன்மை அரசியல்வாதிகளுக்கு ஏற்கும். ஆனால் இலக்கியவாதிகளுக்குப் பொருந்துமா? பட்டி மன்றங்களுக்காய் பேசும்போதும் வாதப் பிரதிவாதங்களின் போதும் இது பொருந்தும். கருத்துரை வழங்கும் போது இடத்துக்கிடம் மாறுபடலாம்

புலம்பெயர் நாடொன்றில் இலக்கியவிஷயம் ஒன்றை கேட்போர் சலிப்படையாமல் தருவதில் தன்நிகரற்றவர் திருமதி. நிர்மலா சுரேஷ் என்பது மறுக்கமுடியாத உண்மை என்பது புலனாகியது. பொது சொற்பொழிவாளர்கள் அவையோரின் பிரதிபலிப்பை முன்னுணர்ந்து அதற்கமைய உரை நிகழ்த்துவது வழக்கமாயினும் முழுமையான முறையில் அவையோரை எடைபோடுவது இலகுவல்ல. அவையோரிடம் இருந்துவரும்மீள்தரவுகளே (feed back) உண்மையில் பேச்சாளர்களை நெறிப்படுத்த வல்லன.

கற்றோர்கள் என்றுமே கருத்து விமர்சனங்களைக் காமுறுபவர்கள். அந்தக் கற்றோர் அவையின் மத்தியில் அறிவில் சிறிய எனது கருத்துக்களையே இங்கு எழுதியுள்ளேன். அங்கிருந்த அறிஞர் குழாமின் கருத்து வேறுமாதிரியாகவும் இருக்கலாம்.

எந்தவொரு இலக்கிய சம்பந்தமான கூட்டம் என்றாலும் அதற்கு 'நகைச்சுவை' சேர்ப்பவர் திரு.சிவா சின்னத்தம்பி. வழமைபோல அர்த்தமுள்ள வகையில் அமைந்த நகைச்சுவை இம்முறை மதவாதிகளுக்கு எரிச்சலை மூட்டுவதாய் அமைந்திருப்பினும் 'அறிவுசால் அவை'யாய் இருந்தமையால் புரிந்துணர்வுடன் ஏற்றுக் கொண்டிருப்பர் என்பதில் சந்தேகமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை




- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**

**2155 Lawrence Ave East, Suite 10**
**(At Birchmount), Scarborough**

- Wheel Chair Access
- Free Parking

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**Monday-Saturday**
**9 AM-9 PM**
**Sundays**
**12 noon-5 PM**
**Sunday by appointment only**
**24 Hrs Emergency Service**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறு(சு)வை



# மாட்டிக்கிட்டாரடி மயிலைக் காளை! கட்டிப்போட்டதொரு கண்டாங்கிச் சேலை!!

## பெண்களிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளும் புலிகள்

அறுஞர் க்ல்லாநிதி கியூறியஸ் ஜி

சென்ற வாரம் ஊழல் பற்றி எழுதியிருந்தேனு.. இந்திரா காந்தியின் லொஜிக் தான் மணியான லொஜிக். யாரோ நிருபர்கள் 'ஏன் இந்தியாவில் ஊழல் அதிகம்' என்று கேட்ட போது.. 'ஊழல் எல்லா இடமும் தானே இருக்கிறது. அதனுல் இந்தியாவில் இருப்பதில் உங்களுக்கு என்ன பிரச்சனே?' என்று பதிலளித்தாராம்.

ஆனுல் இந்தியாவில் பிரச்சனே என்னவென்ருல்.. அரசியலுக்கு போகிறவர்கள் எல்லாருமே ஊழல் செய்து பணம் சம்பாதிக்கலாம் என்று தானே போகிருர்கள். பாராளுமன்ற, சட்ட மன்ற சீட்கள் கிடைப்பதற்காகவே லட்சக்கணக்கில் தலைவர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கு தயாராக பலர் இருக்கும் போது.. ஊழல் அங்கேயே ஆரம்பிக்கிறதே.. பிறகென்ன.. முதலீடு செய்தவர்கள் லாபத்தை எதிர்பார்ப்பது நியாயம் தானே..

★ ★ ★

ஆனுல் ஊழலை சாட்டாக வைத்து எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியைக் கவிழ்க்கப் பார்ப்பது இந்தியாவில் மட்டுமல்ல. . உலகெங்கும் தான் நடக்கிறது. பிரேஸில் ஜனுதிபதி கொலர் ஊழல் காரணமாக பதவியிழந்தார் சென்ற வருடத்தில். ஆனுல் இங்கே மல்ரேனி அரசு தான் பதவி இழக்கப் போவதாக தெரிந்து கொண்டும் அரசாங்கத்தைக் கொண்டு போய் இக்கட்டில் மாட்டும் ஒப்பந்தங்களைச் செய்வது பற்றி எந்த விசாரணையும் இல்லை. நம்ம நாடுகள் என்ருல் இது தான் தருணம் என்று பழைய பிரதமர் என்றும் பாராமல் சிறையில் தள்ளியிருப்பார்கள். இப்போது மல்ரேனி தான் ஆட்சியிலிருந்த காலத்தில் பல்வேறு அரசுத் தலைவர்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததை காரணமாக வைத்து அவரைப் பயன்படுத்தி அந்த நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை இலகுவாக்கலாம் என்ற எண்ணத்தில் சில கம்பனிகள் அவரை தங்கள் இயக்குனர் சபையில் சம்பளத்திற்கு அமர்த்தியிருக்கின்றன. எப்போதுமே இளநீர் குடித்தவர்கள் தப்பித்துக் கொள்ள கோம்பை சூப்பியவர்கள் தான் அகப்பட்டுவார்கள் போலும்.

ஏன் மாத்தயாவின் செல்வாக்கை கட்டுப்படுத்தி, அடக்கி வைக்க ஊழல் குற்றச்சாட்டு காரணமாகவில்லையா? இது பற்றி புலிகளின் அதிகாரபூர்வ நடுநிலை ஏடான மஞ்சரி உங்களுக்கு யுத்தமுனையிலிருந்து செய்தி தரவில்லையா? மாத்தயா உருவாக்கிய சிற்றூரவைகள் ஊழல் செய்ததாக குற்றம் சாட்டியே கலைக்கப்பட்டிருந்தன. இதற்கான விளக்கங்களை(?) புலிகளை முந்திக் கொண்டு அந்தப் பத்திரிகை தந்திருந்ததே! தானுடவில்லையம்மா! தசையாடுது! (சே.. வாலாடுது!)

★ ★ ★

ஊழல், சுருட்டல் என்றதும் இங்கே நினைவுக்கு என்ன வரும்? தமிழ் ஈழச் சங்கம்! தமிழ் ஈழச் சங்கம் நினைவுக்கு வந்தால் வேறு என்ன நினைவுக்கு வரும்? பொதிகை!

தமிழ் ஈழச் சங்கம் பற்றிய சமீபத்திய ஜோக் ஒன்று. . சூரியன் பத்திரிகையில் தமிழ் ஈழச் சங்கம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில்.. என்ருெரு செய்தி.. இதென்னடா.. தமிழ் ஈழச் சங்கம் சமீபத்திய பொதிகை இதழை மறுத்து ஏதாவது சொல்வதற்காக பத்திரிகையாளர் மாநாடு நடத்தி.. அதில் வழமை போல தாயகத்தை புறக்கணித்து.. என்று நினைப்பதற்குள் செய்தியைப் பார்த்தால்.. இந்த மாநாட்டில் சூரியன், செங்கதிர், செரண்டிபம் ஆகிய பத்திரிகைகளின் நிருபர்களே கலந்து கொண்டனர் என்று இருந்தது. இந்த மூன்று பத்திரிகைகளில் இரண்டு ஒன்றுக்குள் வைத்து மற்றது வெளிவருவது.. அடுத்தது அதே நிறுவனத்தின் இன்னுெரு பத்திரிகை.. மொத்தத்தில் ஒரு நிருபரே போய் மூன்றுக்கும் செய்தி சேகரித்திருக்கக் கூடும். இந்த மூன்று பேருக்கும் ஒரு மாநாடு!

இதற்குள் கியூறியஸ்க்கு பயம் பீடித்துக் கொண்டது. . அந்தப் பத்திரிகையின் ஆண்டு விழாவில் நிர்வாகி ஒருவர் கூறிக் கொண்டார்.. ஆங்கிலப் பத்திரிகைகள் எல்லாம் ஏழு நாளும் ஒரே பத்திரிகையை வெளியிடுகிருேம்.. நாங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு பத்திரிகை விடப் போகிருேம்.. இதற்கு முதல் படியாக திங்கட்கிழமைகளில் செங்கதிர் வெளிவருகிறது என்று.

அடடே.. இனிமேல் பத்திரிகையாளர் மாநாடுகள் நடைபெற்ருல்.. அந்தப் பத்திரிகை நிறுவனத்தின் பத்திரிகையாளர்கள் தான் பெரும்பான்மையாக இருப்பார்கள். இனியென்ன.. விற்கப்படும் பிரதிகள்.. 6008, 6009, 6010, 6011, 6012....

★ ★ ★

இந்த ஆருயிரம் கதையைக் கேட்டதும் ஒருவர் கூறியது

'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிருர்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிருர்கள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுக்கு வந்தது.. ஆண்டுவிழாவுக்கு சென்றாராம்.. அங்கே நிர்வாகிகள் ஒவ்வொருவரும் வெளியிடப்படும் பத்திரிகைகளின் எண்ணிக்கையை வித்தியாசமாகக் கூறினார்களாம். இதென்ன பெரிய விசயம்.. தமிழ் ஈழச் சங்கமே கட்டடம் வாங்கிய விவகாரத்தில் ஒவ்வொரு அரச பகுதிக்கும் ஒவ்வொரு தொகையைக் காட்டவில்லையா?

பொதிகை வராது என்று பந்தயம் பிடித்த ஒருவர் தற்போதைய பொதிகை வெளிவந்ததும் மொட்டை அடிப்பதாக கேள்வி.. பொதிகையைப் பார்த்ததும் கியூறியஸ்க்கு பூலான்தேவியின் நினைவு தான் வருகிறது. பெண்ணாக இருந்தும் ஆயுதம் ஏந்தி போராடிய பெண் என்பதால்..

இதுவரை காலமும் தாயகம் சொல்வதைப் பார்த்து 'புலி எதிர்ப்பு பத்திரிகை, விடுதலைக்கு எதிரானது' என்று மறுத்து வந்த ஈழச் சங்கத்தினரும், உலகத் தமிழரும்.. தற்போது தேசியத் தலைவரின் செங்குருதியை நிரப்பிக் கொண்டு விடுதலைப் போராட்டத்திற்கு எதிரில்லாத பத்திரிகை தங்களைப் பற்றி வாங்கு வாங்குவதைப் பார்த்ததும் துண்டைக் காணோம், துணியைக் காணோம் நிலை தான். இப்போது மாறி மாறி 'அட, உன்னாலே வந்த வினைதான்' என்று மாறி மாறி ஆளை ஆள் சாட்டிக் கொண்டிருப்பதாகக் கேள்வி..

★ ★ ★

இம்முறை பொதிகையைப் பார்த்ததும்.. கியூறியஸ்க்கு நினைவு வந்தது நிகழ்கால இலக்கண விவகாரம் தான்.. ஆநின்று, கின்று, கிறு என்று நிகழ்காலத்திற்கு வரும் என்று தமிழாசிரியர் படிப்பித்தார். இந்த தமிழாசிரியர் முக்கிய உலகத்தமிழ் தலைவர் ஒருவரின் தந்தையார். என்னவோ தந்தை படிப்பித்த தமிழை வைத்து மக்களை கடிக்க வேண்டியிருக்கிறது.

சுத்தினார்களா? சுத்துகின்றார்களா? சுத்துவார்களா? என்ற தலையங்கத்துடன் வழமை போல கலைவாணி வணக்கத்துடன்.. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை.. என்று பொதிகை அறிவிக்கிறது. (ஆய கலைகள் அறுபத்து நான்குக்குள்ளும் சைக்கிள் செயின் வீசுதல் உண்டோ எனக்குத் தெரியாது) ஏன் சரஸ்வதிக்கு வணக்கம்? துர்க்காதேவிக்கு அல்லவா வணக்கம் செய்ய வேண்டும்!

தகுந்த ஆதாரங்களுடன், வாசகர் கடிதங்கள் (?) சகிதம் வாங்கு வாங்கியிருக்கிறது பொதிகை... இதுவரையும் பொதிகை ஆசிரியர் காட்டிய ஆதாரங்களுக்கு இன்னமும் தமிழ் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கடமை இருந்தும் தமிழீழச் சங்கம் அதை சொல்லவில்லை. ஆனால் மூன்று பத்திரிகைகளைச் சேர்ந்த ஒரே நிருபர்களுக்கு பத்திரிகையாளர் மாநாடு நடத்தி வேறு எதுவோ பற்றிப் பேசுகிறது.

★ ★ ★

மற்ற இனத்து சங்கத்து ஊழல்கள் பற்றி நம்ம சங்கத்தில் அங்கத்தவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். இங்கே யூத இனச் சங்கம் ஒன்றில் நடந்த ஊழலில் ஒரு பெண் மணி சிறைக்கு சென்றிருக்கிறார். அரசாங்கப் பணத்தை கையாடியவர்களுக்கு சிறை தான் கடைசிக் கந்தாயம்! இது நம்மவர்களுக்குப் புரியவில்லை. இதுவரையும் புலித்தோல் போர்த்துக் கொண்டு ஆடித் திரிந்தவர்கள் இப்போது சிறை என்றதும் கலங்கி விட்டார்கள். மேலிடத்து விசாரணை நடப்பதாகவும் அறிகிறேன். இனியென்ன.. நான் அவனில்லை என்று ஆளுக்காள் மற்றவர் மேல் கையைக் காட்டிக் கொள்ள வேண்டியது தான்.

★ ★ ★

பொதிகைக்கு எத்தனை சவால்கள்.. தடைகள்? கடைகளில் போய் பேப்பரை அள்ளினார்கள். வழக்கு வைத்து நோட்டீஸ் அனுப்பினார்கள். கடைசியாக மாட்டி விடுவதற்காக பொய்யான மரண அறிவித்தல் ஒன்றைப் போடுவித்ததாகவும் கேள்வி.. இந்த முயற்சியை முன்பு தாயகத்திலும் செய்து பார்க்க சில புலிகள் முயன்றன. துணிச்சலாக தனித்து நின்று பொதிகை ஆசிரியர் செயற்படுவதால் இந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்திருக்கின்றன.

இப்படியாக பெண்ணிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட பிறகும் ஏன் இவர்களுக்கு ரோஷம் வரவில்லை என்பது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இதுவரை காலமும் 'புலிகளின் பெயரில்' தாம் இருப்பதால் தம்மை எதிர்த்து யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள் என்ற நினைப்பு இந்த சங்கத்தினருக்கு இருந்தது. இதன் தொடர்ச்சியாகத் தான் பொதிகை ஆசிரியருடன் மோதிக் கொண்டார்கள். விளைவு.. புலி வால் பிடித்த நாயர்களாக.. எதையும் செய்ய முடியாமல் உள்ளார்கள். இன்னும் பல விடயங்கள் வெளிவர உள்ளன.

சங்கத்தினர் மட்டுமல்ல, சங்கத்தினரின் ஊழலுக்கு உடந்தையாக இருந்த வெளியே உள்ள படித்தவர்கள் சிலரும் மாட்டப் போவதாகக் கேள்வி.. வேறு சிலர் தங்கள் தொழில்களுக்கான லைசன்சுகளையும் இழக்கக் கூடும் என்றும் வதந்தி...

★ ★ ★

இங்கே லட்சக்கணக்கில் அரசாங்கத்திடம் இருந்து சேர்க்கப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. இயக்கத்திற்கு அனுப்பப்பட்டதா என்பதை கனடிய அரசு விசாரிக்க வேண்டும். கனடிய வரிப் பணம் இன்னொரு நாட்டின் அடக்குமுறைக்கு பயன்படுத்தப்படுகிறது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே.

.

இதைப் பார்த்து மனதுக்குள் புளகாங்கிதம் அடைவதற்கும் ஆளில்லாமல் இல்லை. முன்பு சங்கத்திலிருந்து சுருட்டி, பின்னர் புலிகள் ஒட்டகம் போல நுழைந்ததும் வெளியேற்றப்பட்டு தேசியச் சங்கம் அமைத்த முக்கூட்டணியினர்.. இப்போது.. மாட்டிக் கிட்டாரடி மயிலைக் காளை.. கட்டிப் போட்டதொரு கண்டாங்கிச் சேலை. . தங்கந் தாண்டி... பொம்பிளை சிங்கந்தாண்டி.. தந்தன்னானே.. அவ மன்னன் தானே... கம்பெடுத்து சண்டை போடும் வாத்தியாரு.. தன் வீரத்தை எங்க கிட்ட காட்டினாரு. . இப்ப போயி பொண்ணுகிட்ட மாட்டினாரு.. என்று பாடிக் கொண்டிருப்பார்கள்.. மச்சான்.. தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஜில்லிட்டிருப்பார்கள்.

அதுசரி.. இங்கே ஒரு நபரே நாலு சங்கம் வைத்து ஒரு சங்கம் மற்றச் சங்கத்திற்கு கம்பியூட்டர் அன்பளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து.. இன்னொரு சங்கம் விருது கொடுத்து, மற்ற நிறுவனம் பத்திரிகை விடுவதாக கதை விட்டுக் கொண்டிருக்கிறுரே.. அது பற்றி பொதிகை ஆராய்ச்சி பண்ணி எழுத முடியாதா?

★ ★ ★

இப்போது பெண்களிடம் வாங்கிக் கட்டும் சீசன் போலும். எங்கு பார்த்தாலும் பெண்கள் இதுவரையும் எதிர்பார்க்காத பல விடயங்களைச் செய்து கொண்டிருக்கிறுர்கள். இந்தியாவின் புகழ்பெற்ற பொலிஸ் அதிகாரியான கிரண் பேடி சமீபத்தில் பம்பாயில் திகார் ஜெயிலில் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். பல சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்த அவரை தங்களது ஊழல்களுக்கு தடையாக இருப்பதால் போலும்.. மாற்றி விட்டார்கள். அன்னை தெரேசா வடிவில் இருந்த பெண்கள் இப்போது பூலான் தேவியாக வடிவெடுத்து விட்டார்கள் போலும். (பெ.நி.வாதிகள் மன்னிக்க!)

உலகின் முதல் பெண் பிரதமர் பதவி இலங்கைக்கு உரியதாக இருந்தது. அது பெரும் சாதனை. இப்போது அயர்லாந்து, துருக்கி, பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை என்று பல இடங்களிலும் பெண்கள். போதாக்குறைக்கு தமிழ்நாட்டில் சசிகலா.. சே.. ஜெயலலிதா! அதுவும் போதாதென்று காங்கிரஸ் கட்சி சோனியா காந்தியை தலைமை ஏற்கச் சொல்லி வற்புறுத்துகிறது.

★ ★ ★

ஒரு தடவை ஸ்டாரில் இஸ்லாம் பெண்களின் உரிமைகளை மறுக்கிறது என்று ஒரு கட்டுரை.. அதற்கு பதில் அளித்த இஸ்லாமியர் ஒருவர் 'இவ்வளவு சொல்கிறீர்களே.. இன்று உலகில் ஜனநாயக நாடுகள் என்று சொல்லப்படும் மூன்று இஸ்லாமிய நாடுகளில் பெண்கள் தான் தலைவர்களாக இருக்கிறுர்களே' (துருக்கி, பாகிஸ்தான், பங்களாதேஷ்) என்று எழுதியிருந்தார்.

★ ★ ★

இந்த பெண் தலைவர்கள் எல்லாம் எதிர்பார்த்ததை விட சிறப்பாக, பயப்படாமல் செயலாற்றியிருக்கிறுர்கள். இந்த தலைவர்களை பதவிக்கு கொண்டு வருவதில் பெரும்பாலும் அனுதாபத்தை காட்டி வாக்கு பிடுங்கலாம், இவர்களை வைத்து தாங்கள் தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளலாம் என்ற மற்றக் கட்சித் தலைவர்கள் தான் காரணமாகியிருக்கிறுர்கள். பதவிப் போட்டி வந்தவுடன் தங்களில் மற்றவர்கள் பதவிக்கு வந்தால் ஆபத்து என்று நிலை வந்தவுடன் கட்சி உடையும் நிலை ஏற்பட, இறந்தவர்களின் குடும்பத்தைக் கொண்டு வந்து கட்சியின் ஒற்றுமையைக் காப்பாற்றவும், விசயம் தெரியாதவர்களைக் கொண்டு வந்தால் தாங்கள் விரும்பியபடியே நடந்து கொள்ளலாம் என்றும் கனவு கண்டு இவர்களை அரசியலுக்குள் இழுப்பதுண்டு. ஆனுல் பதவிக்கு வந்தவுடன் இவர்கள் அரசியலைக் கரைத்துக் குடித்து மற்றவர்களின் கைப்பொம்மைகளாக மாருமல் தாங்களே மற்றவர்களை ஆட்டிப் படைத்திருக்கிறுர்கள்.

எம்.ஜி.ஆர் இறந்ததும் ஜானகியை அரசியலுக்குள் வீரப்பன் கும்பல் இழுத்தது இந்த அடிப்படையில் தான். இதைப் போல மற்றக் கூட்டம் ஜெயலலிதாவை இழுத்தது. ஒரு அரசியல்வாதியின் தகாத தொடர்பு கூட அங்கு மறக்கப்பட்டது.

பண்டாரநாயக்க இறந்ததும் சிறிமாவைக்கொண்டு வந்ததற்கு என்ன காரணம்? அவரது அரசியல் ஞானமா? இல்லையே..

நேருவின் மறைவின் பின்னர் சாஸ்திரிக்குப் பின்னுல் இந்திரா வந்ததற்கும் இது காரணம் தான். இந்த குடும்ப அனுதாப அலைகள் தான் பெனுசிருக்கும் சரி, காலிடா பேகத்திற்கோ, அவரது எதிர்க்கட்சித் தலைவிக்கோ, பிலிப்பைன்ஸில் அக்குயினோவுக்கோ சாதகமாக இருந்தது.

இவர்கள் எல்லாம் ஆட்சிக்கு வந்ததும் நிலைமையைப் புரிந்து கொண்ட வெறும் பொம்மலாட்டப் பொம்மைகளாக நூல்களை வேறெங்கோ வைத்திருப்போர் ஆடும் ஆட்டத்திற்கு ஆடாமல் தங்கள் சுயத்தைக் காட்டி நின்றிருக்கிறுர்கள்.

இது சந்திரிகாவின் திறமைக்கு வைத்திருக்கும் மதிப்பு முதல் ஜெயலலிதாவின் காலில் விழுதல் வரை நீடிக்கிறது.

★ ★ ★

இந்தப் பெண்கள் எல்லாம் தங்கள் ஆட்சிகளின் போது எழுந்த எதிர்ப்புகளை இரும்புக் கரம் கொண்டு துணிச்சலாக அடக்கியிருக்கிறுர்கள். சிறிமாவுக்கு ஒரு ஷே குவேரா இயக்கம், இந்திராவுக்கு ஒரு பொற்கோயில். பெனுசிருக்கு ஒரு ஜனுதிபதி.. துணிச்சலாக எதிர்கொண்டு நின்றுர்கள்.

இந்த வரிசையில் இன்று துருக்கிய பிரதமர் உள்ளார். குர்திஷ்காரர்களின் போராட்டத்தை அடக்குவதில் கடுமையான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறுர். இராணுவம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு ஈராக்கின் எல்லைக்குள் புகுந்து கூட தாக்குதல் நடக்கிறது. குர்திஷ்காரர்களின் போராட்டம் நியாயமானது என்பது மறுக்க முடியாதது. இருந்தாலும் துருக்கியின் தேசிய நலனை முன்வைத்து வெளிநாட்டு எதிர்ப்புகளையும் உதாசீனம் செய்து விட்டு கடும் தாக்குதல் நடக்கிறது. இங்கு துணிச்சல் தான் கியூறியஸ் சொல்ல வருவது, சரி பிழை நியாயம் அல்ல.

பங்களாதேஷிலும் தற்போது தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடக்கிறது. அவர்களும் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறுர்கள்.

காங்கிரஸ் கட்சியில் அர்ஜுன் சிங், திவாரி தலைமையில் நரசிம்மராவிற்கு எதிராக எழுப்பப்படும் போர்க்கொடியில் கூட.. கட்சிக்கு தலைமை தாங்கும்படி சோனியாவுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. நூறு கோடியை எட்டும் சனத்தொகை கொண்ட ஒரு நாட்டில் தலைமை வகிக்க ஒரு ஆள் இல்லாமல் போவது எவ்வளவு விந்தையான விடயம். நேரு–இந்திரா–ராஜீவ் என்று உருவங்களைக் காட்டி வாக்குச் சேர்ப்பதற்காகவும், தங்கள் ஒற்றுமையைக் காப்பாற்றவும்.. இப்படி இன்னொரு நாட்டில் பிறந்த பெண்ணை மன்றுட வேண்டியுள்ளது.

சோனியாவும் மதில் மேல் பூனையாக.. எந்த விதத்திலும் பிடி கொடுக்காமல்.. அதே நேரம் மறுக்காமல் எல்லோரையும் சீட் நுனியில் உட்கார வைத்திருக்கிறுர். ஒருவேளை பிரியங்காவை தகுந்த நேரத்தில் உள்நுழைப்பதற்காகவும் இருக்கலாம்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் ஜெயலலிதாவைப் பார்த்து விட்டு என்.டி.ராமராவும் தன் மனைவியை அரசியலுள் நுழைக்கப் பார்க்கிறார். ஜெயலலிதா தன் அமைச்சர்களை நடத்தும் நடவடிக்கையைப் பார்த்த பின்பாவது தெலுங்கு தேசக் கட்சியினர் கொஞ்சமாவது விழித்தெழக் கூடும். தேசிய முன்னணிக் கூட்டத்தில் சிவபார்வதி கலந்துகொள்கிறார். ஆளுயரக் கட் அவுட்கள் ஆந்திராவில் வைக்கப்படுகிறது. தங்கள் தலையிலேயே ஆந்திராக் காரர்கள் மண் அள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்

★ ★ ★

இப்போது சந்திரிகா அலை.. யாழ்ப்பாணத்தில் சந்திரிகா சாறிகள் வரை பிரபலமானது. சமாதானத்தின் மீதான வேட்கை அவ்வளவு தூரம் பிரபாகரனை விட, சந்திரிகாவின் மேல் தமிழ் மக்களை நம்பிக்கை கொள்ளவைத்தது.

இப்போது முழு அளவிலான யுத்தப் பிரகடனம். வேறு வழியில்லை என்று புலிகள் சண்டையை ஆரம்பித்தது போலவே சந்திரிகாவும் வேறு வழியில்லை என்று யுத்தப் பிரகடனம் செய்கிறார். இதில் யார் சரி, யார் பிழை என்று பார்க்க புறப்பட்டால் வாதிடுபவர்கள் தங்களுக்குள் யுத்தப் பிரகடனம் செய்ய வேண்டிய நிலை வரும்.

பிரச்சனை என்னவென்றால்.. இந்த யுத்தத்தினால் யாருக்கு நன்மை என்ற கேள்வி வருகிறதே.. அது தான் பிரச்சனை.. பதினேழு வருட ஆயுதப் போராட்டத்தில் முடிந்தது எல்லாம் கோட்டை உடைப்பும், முகாம் தகர்ப்பும் தான். ஒவ்வொரு முகாம் தகர்க்கப்பட்ட போதும், கோட்டை பிடிக்கப்பட்ட போதும் அடுத்த தமிழீழம் தான் என்றுதான் பலரும் கனவு கண்டார்கள். இப்போது கப்பல் தகர்க்கப்பட்ட போதும். வே' ஸ்டாக விமானம் வீழ்த்தப்பட்ட போதும் அடுத்த தமிழீழம் தான் என்ற கனவு.

ஆனால் விழுந்தப்பட்ட இரண்டு காற்றாடி விமானங்களுக்கு பதிலாக தற்போது ஜெட் விமானங்கள் வாங்கப்படுகின்றன. விமானக் குண்டுவீச்சுக்களும் நிறுத்தப்பட்ட பாடும் இல்லை. திருமலையிலிருந்து புறப்பட்டு வந்து குண்டு வீசிச் செல்வதாக 'யுத்த முனைச் செய்திகள்' கூறுகின்றன.

மறுபுறத்தில் இராணுவமும் பதினேழு வருடங்களாக புலிகளை அடக்குகிறேன், அழிக்கிறேன் என்று எதையும் கண்டதில்லை. புலிகள் முகாமைத் தகர்க்கும் போது அணில் ஏற விட்ட நாய் போல வாயைத் திறந்து வைத்தது தான் மிச்சம்.

★ ★ ★

இதன் லொஜிக் இது தான். யுத்தம் இரண்டு தரப்பினருக்குமே வெற்றியைத் தரப்போவதில்லை. புலிகள் முகாம் அடித்து தமிழீழம் பெறப் போவதும் இல்லை. இராணுவம் யாழ்ப்பாணத்தைப் பிடித்து புலிகளை அழிக்கப் போவதுமில்லை. இரண்டு தரப்பினரது யுத்தத்தினாலும் அழியப் போவது தமிழ் மக்களே.. முடிந்தால் புலிகள் கொழும்பில் குண்டுகள் வைக்கலாம், சந்திரிகாவைக் கொல்லலாம். அது போல இராணுவமும் குண்டு வீசி யாழ்ப்பாணத்தை அழிக்கலாம். வெற்றி பெறப் போவது ஆயுத வியாபாரிகள் மட்டும் தான்.

★ ★ ★

military offensive க்கு முன்னால் சந்திரிகா diplomatic offensive இல் வெற்றி பெற்று விட்டார். எல்லா நாடுகளுமே அரசின் பின்னால் நிற்கின்றன. புலிகளுக்கு ஆதரவாய் இருப்பது தமிழ்நாட்டில் செல்லாக்காசான அரசியல் தலைவர்கள் சிலர் தான். இங்கே ஈழச் சங்கத்தினர் ஒட்டாவா போய் அரசுத் தலைவர்களைச் சந்தித்த போது 'விமானம் வீழ்த்தியது பிழை' என்று அவர்கள் சொன்னதாகவும் 'சந்திரிகா அரசுக்கு தவணை கொடுத்த போதும் அது எதுவும் செய்யவில்லை' என்று இவர்கள் சொல்ல.. 'பதினேழு வருடப் பிரச்சனைக்கு ஆறு மாதத்தில் எப்படி தீர்வு காண முடியும்' என்று அவர்கள் சொன்னதாகவும் பொதிகை கூறுகிறது.

அதுதான் இங்கே ஒரு பெண்ணிடம் புலிகள் வாங்கிக் கட்டிக்கொள்வது போல.. அங்கேயும் பெண்ணிடம் தான் பாடம் படிக்கப் போகிறார்களோ யார் கண்டது?


*This newspaper is published by*
*Georgicka communications.*
*A member of*
*Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்



தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*


வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை

## தாயகம்
## சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும்**
Georgicka communications
பெயருக்கு எழுதப்பட வேண்டும்.
(தாயகத்தின் பெயருக்கு அல்ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!

# அன்ரனி பிறதர்ஸ்

**உடன் மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள்**

☞ தமிழக, இலங்கை, கனடிய வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் உடனுக்குடன் கிடைக்கும்


☞ முத்திரை, சிகரெட், போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள் TTC Tickets, Lottery Tickets

★ மலிவு விலையில் லேசர் இசைத்தட்டுக்கள்
★ தமிழ், ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

# ANTONY BROTHERS

**1472 Queen St West (Queen/Lansdowne)**
Toronto, Ont. M6K 1M4
TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903

வாரத்தில் 7 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310

*சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான உடைகள்*

*சுவாமிப் படங்கள், பரிசுப் பொருட்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள்*

**அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்காபரோ நகரில் தன்னிகரற்ற தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ்

# ரேடிங் கோ லிமிட்

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்), மற்றும் பாண் உடனுக்குடன் கிடைக்கும்

அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் மலிவு விலையில்

3852 Finch Ave East
(Kennedy/Finch)
Tel:(416) 321 2739

# P.S.T.T

சி.டி. இசைத்தட்டுக்கள்
வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

Video Transfer
(Any system)
$8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

5210 Finch Ave East #23 (Finch/Middlefield) Tel:609-0141

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org